Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 18 (16.09.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 347

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-1295)



தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கு, ஈகச்சுடரேற்றி அஞ்சலிசெலுத்துகிறார் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்.

## தியாகி திலீபன் நினைவுநாள் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நேற்று ஆரம்பமாகின!

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 16 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள், தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் உணர்வுபூர்வமாக நேற்று ஆரம்பமாகியது.

தியாகி திலீபன் நல்லூர் வீதியிலே உண்ணா விரதத்தை ஆரம்பித்த நேரமான காலை 9.55 மணிக்கு தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் பொதுச்சுடர் ஏற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பொதுநிறுவனங்கள், பொது அமைப்புக்கள் என்பவற்றில் விசேடமான பந்தல்கள் அமைக்கப்பட்டு, தியாகதீபம் திலீபனின் திருவுருப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நல்லூரில் திலீபனின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி முன்பாக நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. தேசிய எழுச்சிப் பேரவையின் ஆலோசகர் செம்பியன்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரினை தமிழீழ கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்ரர் ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஈகச் சுடரினை மாவீரர் லெப். அர்ச்சுனாவின் தந்தையார் சதாசிவம் ஏற்றினார்.

இந்த நிகழ்வில், தூயவன் அரசறிவியல்துறை விரிவுரையாளர் அரசண்ணா உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

குடாநாட்டிலுள்ள ஒவ்வொரு அரசியற்துறை கோட்டச் செயலகங்களிலும் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

இதேபோன்று - மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள விடுதலைப் புலிகளின் பாசறைகள் மற்றும் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் திலீபன் நினைவுநாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. (13, 99,100,111,201,202,)

# இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண விடுதலைப் புலிகள் முன்வைக்கும் யோசனைகளை அரசு ஏற்காவிடில் பேச்சுக்கள் சாத்தியமில்லை!

## தமிழ்ச்செல்வன் கூறியதாக அகாஷி தெரிவிப்பு

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கான யோசனைகளை விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளனர். இந்த யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டால், மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு திரும்பப் போவதில்லையென விடுதலைப் புலிகள் தன்னிடம் தெரிவித்ததாக, ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி தெரிவித்தார்.**

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை வன்னியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் கொழும்பில் நடத்திய பத்திரிகை

தாவது, அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர்.

சமாதானப் பேச்சுக்களிலிருந்து

ஆரம்பிக்கவேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்களுடனும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் நடத்திய

## தமிழ்ச்செல்வனுடன் ரெலவ்சன் இன்று கிளிநொச்சியில் சந்திப்பு!

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலவ்சனுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்குமிடையிலான சந்திப்பொன்று இன்று மாலை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில்

நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரக டோட்ரயர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, சர்ச்சைக்குரிய குரங்குப்பாஞ்சான் விவகாரம், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் முகாம் அமைத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரை

# தமிழ்ச்செல்வன் கூறியதாக அகாஷி தெரிவிப்பு

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கான யோசனைகளை விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளனர். இந்த யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டால், மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு திரும்பப் போவதில்லையென விடுதலைப் புலிகள் தன்னிடம் தெரிவித்ததாக, ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி தெரிவித்தார்.**

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை வன்னியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே யசுசி அகாஷி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர்.

சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலகி பல மாதங்கள் கடந்திருந்தாலும், இரு தரப்பினரும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்களுடனும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது அவர்களது அபிலாஷைகளைத் தெளிவா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வனுடன் ரெலவ்சன் இன்று கிளிநொச்சியில் சந்திப்பு!

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலவ்சனுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்குமிடையிலான சந்திப்பொன்று இன்று மாலை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் மாலை 4.30 மணியளவில், இந்தச் சந்திப்பு இடம்பெறவிருப்பதாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரக டோட்ரயர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, சர்ச்சைக்குரிய குரங்குப்பாஞ்சான் விவகாரம், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் முகாம் அமைத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் பாதுகாப்பு அச்சுறுத்தல்; பிரதமருக்கு சந்திரிகா நீண்ட கடிதம்!

திருகோணமலைக்கு, விடுதலைப் புலிகளினால் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அங்குள்ள நிலைமைகளை விளக்கி ஒன்பது பக்கங்களைக் கொண்ட நீண்ட கடிதம் ஒன்றினை பிரதமர் ரணிலுக்கு ஜனாதிபதி சந்திரிகா அனுப்பியிருக்கிறார்.

திருமலையில் குரங்குப்பாஞ்சான் உட்பட பல முகாம்களை விடுதலைப் புலிகள் அமைத்து வருகின்றனர். இதனால் திருகோணமலை துறைமுகத்துக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைத்து வரும் இந்த முகாம்களால் நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

# இலங்கை வரும் கோபி அனான் கிளிநொச்சி செல்லவுள்ளார்?

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு, இலங்கை வரும் ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கும் விஜயம்செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் அடுத்த மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாறவுள்ளார்.

ஐ.நா. செயலாளராக இருந்த யுதாண்ட் இலங்கை விஜயம்செய்த பின்னர், கோபி அனானே இங்கு வருவது குறிப்பிடத்தக்கது.

# கடலில் தத்தளித்த அகதிகளை காப்பாற்றிய இந்திய மீனவர்கள்!

தமிழகத்திலிருந்து இலங்கை நோக்கிவந்த 19 தமிழ் அகதிகள், நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தபோது, இந்திய மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றிக் கரைசேர்த்தனர்.

ஆறு ஆண்கள், நான்கு பெண்கள், ஒன்பது குழந்தைகள் அடங்கிய இந்த அகதிகள், இராமேஸ்வரத்திலிருந்து படகு மூலம் இலங்கை நோக்கி வந்தவேளை, படகில் துவாரம் ஏற்பட்டு படகு முழுவதும் நீர்புகுந்து நடுக்கடலில் தத்தளித்த வேளையிலேயே இவர்கள் காப்பாற்றப்பட்டனர். முகாம்களிலிருந்து இலங்கை வருவதற்கு உரிய அனுமதி பெறாத இவர்கள், காப்பாற்றப்பட்டு மீண்டும் இராமேஸ்வரத்துக்கு அழைத்துச் செலலப்பட்டனர்.

# சந்திரிகா - அகாஷி நேற்று சந்தித்து பேச்சு

(கொழும்பு)

ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட பிரதிநிதி யசுசி அகாஷி நேற்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சமாதான முயற்சிகள் குறித்து இருவரும் கலந்துரையாடியதாக, ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கனேடிய தூதுக்குழுவினர் வன்னி செல்லவுள்ளனர்!

(கொழும்பு)

கனேடிய நாட்டின் தூதுக்குழு ஒன்று - எதிர்வரும் வியாழக்கிழமை கிளிநொச்சி செல்லவுள்ளது.

கிளிநொச்சிக்கு செல்லும் இந்தத் தூதுக்குழுவினர் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இவர்கள் தற்போது, தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாகவும் மற்றும் கனேடிய நாட்டின் உதவிகளை வழங்குவது தொடர்பாகவுமே, விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கனேடியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -1139)

# அரச ஊழியர்களுக்கு 1500 வீடுகள் அமைக்கும் திட்டம் விரைவில் ஆரம்பம்!

அரசாங்க ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் - உடனடியாக 10 வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

18 மாத காலத்துக்குள் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு 2005 ஆம் ஆண்டில் அரச ஊழியர்களுக்கு சொந்தமாக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த 1500 வீடுகளும் - கொள்ளுப்பிட்டி கடற்கரை வீதி, காலி வீதி, கொலன்னாவ, பேலியகொடை, இரத்மலானை, ஹோமகம, பாலாத்கங்குடுவ, பன்னிப்பிட்டிய, ராஜகிரிய ஆகிய இடங்களிலே அமைக்கப்பட இருக்கின்றன.

மேற்கு மாகாணசபை அமைக்கவுள்ள இந்த வீட்டுத் திட்டத்தில் 1500 வீடுகள் கட்டுவதற்கு 1470 மில்லி யன் ரூபா செலவிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பாசையூர் சந்தைக்கு செல்வோர்மீது படையினரின் சோதனை அதிகரிப்பு!

(பாசையூர்)

பாசையூர் மீன் சந்தைக்கு செல்லும் பொதுமக்கள் மீது படையினர் சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.. கடந்த ஒருவருடகாலமாகத் தளர்வாகக் காணப்பட்ட சோதனை நடவடிக்கைகள், தற்பொழுது காவல் அரண்கள் புதுப்பிக்கப்பட்டு, சந்தைக்குச் செல்லும் பொதுமக்கள் அனைவரும் உடற்சோதனைக்கு உள்ளாக்கப்பட்டே சந்கைக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள். (58)

## வடமராட்சி வலய
# கணித விஞ்ஞான போட்டி முடிவுகள் வெளியாகின!

(ஆழியவளை)

வடமராட்சி வலயமட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கணித விஞ்ஞானப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் சித்தியடைந்துள்ள மாணவர்களின் விபரங்கள் வருமாறு-

**தரம் 6**

செ.காருண்யா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.அரவிந்த் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சுஜீவன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.பிரணவன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சுதர்சன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சர்மிலன் (ஹாட்லிக் கல்லூரி), ரி.நிசாந்தன் (ஹாட்லிக் கல்லூரி).

**தரம் 7**

நா.பவிந்திரன் (விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ்.றஜீபவன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.மெக்சிபாரதா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), எஸ்.விதுரன். (ஹாட்லிக் கல்லூரி), அ.நிதர்சன் (விக்கினேஸ்வராக் கல்லூரி), ரி.பிரணவன் (ஹாட லிக் கல்லூரி), பா.கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி), த.பிரதீபா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை).

**தரம் 8**

கே.உமாசுதன் (ஹாட்லிக் கல்லூரி), பா.குருபரன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), எஸ்.அபிராமி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), எஸ்.ராகுலசிதன் (ஹாட்லிக் கல்லூரி), ந.கிருஸ்ணி (வட இந்துமகளிர் கல்லூரி), தி.இந்துஷா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை).

**தரம் 9**

கே.வாகீசன் (ஹாட்லிக் கல்லூரி), க.கௌசிகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), சி.செயந்தன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), ச.கார்த்திகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), க.சிந்துஜா (வட இந்துமகளிர் கல்லூரி), ஆர்.மோகனப்பிரியன் (ஹாட்லிக் கல்லூரி).

**தரம் 10**

ரி.சுபேந்திரராசா (ஹாட்லிக் கல்லூரி), வே.சுகன்யா (வடஇந்து மகளிர் கல்லூரி), த.தர்மினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), வி.நிஷாந்தி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஆர்.றஜீவன் (ஹாட்லிக் கல்லூரி), பி.ஜானகி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), வி.சிந்துஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), சி.மாதுளா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை).

**தரம் 11**

இ.ராகுலன் (ஹாட்லிக் கல்லூரி), க.பிரதீபன் (ஹாட்லிக் கல்லூரி), அ.அன்ரனி யசிந்தா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), அ.அனுதிபா (விக்கினேஸ்வரா கல்லூரி), ச.உமா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ம.அனந்தினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

மேற்படி போட்டிகளில் சித்தியடைந்த இ.ராகுலன் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (122)

*புனரமைக்கப்பட்டுவரும்*
# யாழ். மத்திய கல்லூரியின் புதிய தாவரவியல் பூங்கா!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலுள்ள தாவரவியல் பூங்கா - யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவரும், மூத்த ஆசிரியரும், உப அதிபராகக் கடமையாற்றியவருமான அமரர் கே.கந்தசாமியின் புதல்வர்கள் வழங்கிய நிதியின்மூலம் புனரமைக்கப்பட்டுவருவதாக, யாழ். மத்திய கல்லூரி அதிபர் இராசதுரை தெரிவித்தார்.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் மிகவும் சிறந்த பூங்காவாகத் திகழும் யாழ். மத்திய கல்லூரியின் தாவரவியல் பூங்காவினை நிறுவ, மூலகர்த்தாவாக விளங்கிய அமரர் கந்தசாமியின் பெயர் - பூங்காவுக்கு ஞாபகார்த்தமாக பெயரிடப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. (58)

# உள்ளூராட்சி ஊழியர்களுக்கு 5 நாள் சுற்றாடல் கருத்தரங்கு

சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை அனுசரணையுடன், உள்ளூராட்சி திணைக்களத்தினால் உள்ளூராட்சி உத்தியோகத்தர்களுக்கு,' சூழல் சுற்றாடல் தொடர்பான ஐந்து நாள் கருத்தரங்கு நேற்றையதினம் யாழ். செயலகத்தில் ஆரம்பமாகியது.

நேற்றுக்காலை 9 மணிக்கு, யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில், அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சூழல், சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். நேற்றைய தினம் முதல் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.



யாழ். கல்வி வலய திணைக்களம் அமைந்துள்ள பகுதியில் - கவனிப்பாரற்று இடிந்துவிடும் நிலையில் காணப்படும் யமுனா ஏரியின் முகப்புத் தோற்றத்தைப் படத்தில் காணலாம். (110)

## ஈட்டியெறிதல் போட்டியில் முதலாம் இடம்

(யாழ்ப்பாணம்)



அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மாணவி சுபத்திரா அந்தோனிசாமி, அண்மையில் 17 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான ஈட்டியெறிதல் போட்டியில் வெற்றிபெற்று, தேசியமட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

**சிறு விளம்பரம்**

**காணவில்லை**

அன்னசத்திரலேன் வைரவர் கோயிலுக்குச் சொந்தமான சிவப்பும் வெள்ளையும் கலந்த மாட்டை சனி மாலையிலிருந்து காணவில்லை. கண்டவர்கள் கீழ்வரும் முவரிக்கு அறியத்தரவும். ந.ராணி, 204, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (482)

ராஜா யாழ்ப்பாணம்.
அருண், வடிவேல், விஜயகுமார் நடித்த
அன்பு
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
(சி-1424)

திறைஞ்சனல்ஸ் சங்கானை
எம்.ஜி.ஆர், ஜெயலலிதா நடித்த
ராமன் தேடிய சீதை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
WISH MASTER
(கராட்டிப்படம்)
(சி-1425)

# சின்னஞ்சிறு செய்திகள்

### யுவதியின் சடலம் ஒப்படைப்பு

(வண்ணை)

காய்ச்சலால் மரணமானதாகத் தெரிவித்து, இளம் யுவதி ஒருவரின் சடலம் - உறவினர்களால் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் சங்குவேலியைச் சேர்ந்த பகீரதி சசிகுமார் (வயது 22) என்பவரின் சடலமே ஒப்படைக்கப்பட்டது. சடலம் மரண விசாரணையின் பொருட்டு பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது. (111)

### கோப்பாய் கோமகனின் நினைவுதினம் நாளை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோமகன் அமரர் கு. வன்னியசிங்கம், திருமதி வன்னியசிங்கம் ஆகியோரின் நினைவுதினமும், அஞ்சலி நிகழ்வும் - நாளை காலை 10 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின கோப்பாய் கிளைத்தலைவர் க.சின்னத்துரை தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் - நாடாளுமன்ற உறுபபினர் மாவை சேனாதிராசா நினைவுரையாற்றவுள்ளார்.

### கோப்பாய் கோட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(ஈச்சமோட்டை)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்றுவருகின்ற கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டப் போட்டியில் - காலை 8 மணிக்கு 14 வயதுப் பிரிவில் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியை எதிர்த்து சோமாஸ் கந்தா கல்லூரியும், அத்தியார் இந்துக்கல்லூரியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயமும், 16 வயதுப் பிரிவில்- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியை எதிர்த்து புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியும், அத்தியார் இந்துக்கல்லூரியை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலயமும் மோதவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (58)

### மாகாண மட்ட கைப்பணிப்பொருள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்துறை திணைக்களத்தினால், மாகாணமட்டத்தில் கைத்தொழில் கண்காட்சி போட்டி- எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் மூன்றுதினங்கள் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி மற்றும் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் கைத்தொழில் உற்பத்தியாளர்கள்- தமது உற்பத்தி பொருட்களை எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ்.செயலகத்தில் இயங்கும் மாவட்ட தொழிற்துறைத் திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு மாவட்ட அலுவலர் ப.ராகவன் தெரிவித்தார்.

### புலோலி வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம்

(வடமராட்சி)

துன்னாலை வடக்கு - புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறவுள்ளது.

### நல்லூர்க்கோட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிஇன்று

கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இன்று நடைபெறும் - நல்லூர் கோட்ட மட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில், பிற்பகல் 1.30 மணிக்கு 14 வயது பிரிவில் - யாழ். இந்துக் கல்லூரியை எதிர்த்து நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயமும், கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயமும், 16 வயது பிரிவில் - யாழ். இந்துக் கல்லூரியை எதிர்த்து செங்குந்த இந்துக் கல்லூரியும், 18 வயதுப் பிரிவில் - கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்துக் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயமும் விளையாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.

### வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அன்னதான மடம்

அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் ஈசானமூலையில் 'ஆதீனமூல நாராயண அமுதசுரபி' என்னும் அன்னதானமடம் 15 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த அன்னதான மடம் கற்கோவளம் அடியார்களின் முயற்சியால் புனரமைக்கப்பட்டுள்ளது. மஹோற்சவ காலத்தில் 17 நாட்களும் தொடர்ந்து பக்த அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என, அமுதசுரபி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். (17)

### யாழ்.கோட்ட மட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணக் கோட்ட பாடசாலைகளிடையே நடைபெற்றுவருகின்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில், இன்று பிற்பகல் 1.30 மணிக்கு 14 வயது பிரிவில் - யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து வைத்தீஸ்வராக் கல்லூரியும், 16 வயது பிரிவில் - புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தை எதிர்த்து நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும், யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து புனித ஜோசப் மகாவித்தியாலயமும், 18 வயதுப் பிரிவில் - யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயமும் விளையாடவுள்ளன. (58)

### பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை வியாபாரிமூலை தம்பர்சிட்டி சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் - வருடாந்த மஹோற்சவ காலங்களில் தொடர் சொற்பொழிவாற்றிய கார்த்திகேசு கமலநாதனுக்கு "சித்தாந்த வித்தகர்" என்னும் பட்டம் மகாகணபதி சிவானந்த ராஜா குருக்கள் வழங்க, பொன்னாடையை ஆலய நிர்வாகப் பொறுப்பாளர் வே.த.கந்தையா பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

### சந்நிதியான் ஆச்சிரமத்தில் சொற்பொழிவு

(வடமராட்சி)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால், நடாத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில் - எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்குப் பெரியபுராணம் என்னும் தலைப்பில் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றுவார். இதன் அறிமுகவுரையை செ.நடராசா வழங்குவார்.

# பொலிஸார் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை நாடவேண்டும்

## மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

பொலிஸார் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக, விசாரணை நடாத்துவதற்கு சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவின் உதவியை நாடவேண்டும் என, மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸார் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடத்துவதற்கு வசதியாக, தேசிய சுயாதீன ஆணைக்குழுவில்- மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதி ஒருவர் இடம்பெற்றிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமை மீறல் தொடர்பாக விசாரணை நடாத்துவதற்கு, பொலிஸ் ஆணைக்குழுவின் உதவியும், ஒத்துழைப்பும் தேவையாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் பி.எம்.ஜி.விஜேயவீர இராஜினாமா!

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் பி.எம்.ஜி.விஜேயவீர தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இவர், தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி இருந்ததாகவும், அவரது இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் விஜேயவீர பதவியை இராஜினாமா செய்தது குறித்து, ஜனாதிபதி அரசியல் அமைப்புச் சபையின் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

பேராசிரியர் விஜேயவீர பதவியை இராஜினாமா செய்தது கவலைக்குரிய விடயம் என்றும், அவரின் இராஜினாமாக் கடிதத்தில் உறுப்பினர் ஒருவர் நடந்துகொள்ளும்விதம் குறித்து, பேராசிரியர் விஜேயவீர, ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

### பொலிஸ் உத்தியோகத்தர் குத்திக் கொலை !

மாத்தறை - நாவின்னப் பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இரு குழுக்களுக்கிடையில் நடந்த மோதலின் விளைவாகவே, இவர் - தனது வீட்டில் இருக்கும்போது, குத்திக் கொலை செய்யப்பட்டதாக, மாத்தறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# விசேட அதிரடிப்படையினருக்கு வெளிநாட்டு நிபுணர்கள் பயிற்சி

விசேட அதிரடிப்படையின் புதிய கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெகே, அதிரடிப் படையைச் சேர்ந்தவர்களுக்கு - அமெரிக்க, இந்திய, இத்தாலிய நிபுணர்களின் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

அதிரடிப் படையின் கட்டளை அமைப்பை மாற்றவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. அத்துடன், வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும் பயிற்சிக்காக பத்து அதிரடிப்படையினர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அதிரடிப்படைக்கு - இளம் இரத்தமும், நவீன தொழில்நுட்பமுமே அவசியம். மேலும், அதிரடிப்படையின் ஆட்பலத்தை 5 ஆயிரத்திலிருந்து, 6 ஆயிரமாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்போவதாக நிமால் லெகே தெரிவித்தார்.

# மக்கள் போக்குவரத்திற்கு மடு வீதி திறக்கப்படலாம்!

மன்னார் - மடு வீதி மக்களின் போக்குவரத்துக்காக அடுத்த சில தினங்களில் திறக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகட்ரயர் தெரிவித்தார்.

வீதி - பொதுமக்களின் போக்குவரத்துக்குத் திறக்கப்படும் தீர்மானம், இன்று தங்களுக்கு அறிவிக்கப்படும் என்று அவர் கூறினார்.

கடந்த சில வாரங்களாக மூடப்பட்டிருக்கும் இந்த வீதியூடாக, மடு ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் மாத்திரமே போக்குவரத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

எனினும், இந்த வீதி மூடப்பட்டதன் காரணமாக, போக்குவரத்தை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக, கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் தெரிவித்தார்.

# கிராம அலுவலருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

அநுராதபுரத்தில் சடலம் ஒன்றை புதைக்குமாறு உத்தரவிட்ட கிராம அலுவலர் ஒருவர் மீது, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஒரு பெண்மணி சந்தேகத்துக்கு இடமான முறையில், இறந்த சம்பவம் ஒன்று அநுராதபுரத்தில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் மரண விசாரணை அதிகாரி விடுமுறையிலுள்ளதால், அந்த விசாரணையை நடாத்த முடியாது இருந்ததாக, மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

இந்த நிலையில், கிராம அலுவலர் - அந்தப் பெண்மணியின் உடலைப் புதைக்குமாறு கூறவே, பெண்ணின் உடல் புதைக்கப்பட்டது.

பெண்ணின் இறப்பில் சந்தேகங்கொண்ட உறவினர், கிராம அலுவலருக்கு எதிராக முறைப்பாடு ஒன்றைச் செய்தனர்.

இறந்த பெண்மணியின் உடல் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு, மரண விசாரணைகள் நடாத்தப்பட்டன.

மரண விசாரணை அதிகாரி - விசாரணை செய்வதற்கு ஏன் மறுத்தார் என்று அவரிடம் காரணம் கேட்கப்பட்டுள்ளது.

# தேசிய எழுச்சி பேரவையின் பிரதேச எழுச்சி மாநாடு!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள கோயிற்குளம் தேசிய எழுச்சிப்பேரவையின் பிரசேத எழுச்சிமாநாடு, நேற்றுமுன்தினம் மாலை நான்கு மணிக்கு கோமரசங்குளம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கோயிற்குளப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில், தேசியக்கொடியினை வவுனியா மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செங்கதிர் ஏற்றினார். ஈகச்சுடரினை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், பெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பிருந்தா ஆகியோர் ஏற்றினர்.

அங்கு உரையாற்றிய எழிலன்- தற்போது இடைக்கால நிர்வாக சபையின் திருத்த யோசனைகளை அரசிற்குக் கொடுக்கும் சூழலில் புலிகள் உள்ளனர். இந்த யோசனைகளுக்கான சாதகமான பதிலை அரசு தராவிட்டால், அது அரசின் பதிலிலேயே தங்கியுள்ளது. நாம் இந்த சமாதான முன்னெடுப்புக்களுக்காக எவ்வளவோ விட்டுக்கொடுப்புக்களைச் செய்துள்ளோம். இதனைச் சர்வதேச சமூகமும், ஏனையவர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (03)

# நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லை!

## திலக் மாரப்பன கூறுகிறார்

நாட்டின் இறைமைக்கும், பாதுகாப்புக்கும் - தற்போது எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை. பாதுகாப்புநிலை - மோசமாகும் நிலைக்கு அரசாங்கம் எந்தவிதத்திலும் உடந்தையாக இருக்கமாட்டாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

நேற்று புத்தளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும்போது, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது.

இந்தவேளையில், விடுதலைப் புலிகள் - சமாதானத்திற்கு விரோதமாகவும், சமாதான முயற்சியைக் குழப்பி, யுத்தத்திற்குத் தயாராகி வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

இது முற்றிலும் தவறான பிரசாரம். தற்போது நாட்டின் பாதுகாப்புக்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை.

யுத்தம் நடக்குமா என்று மக்கள் அஞ்சவேண்டிய அவசியமில்லை. அவ்வாறனா சூழல் ஏற்படவில்லை.

நாட்டுமக்கள் சமாதான முயற்சியை ஏற்படுத்தவே, வாக்குக்களை எமக்கு வழங்கியுள்ளனர். அதனை எமது கட்சி ஒருபோதும் துஷ்பிரயோகம் செய்யமாட்டாது எனவும் திலக் மாரப்பன தெரிவித்தார்.

# இத்தாலிக்கு ஆட்களை கடத்துவோரை கண்டறிய புலனாய்வுத்துறையினர் தீவிரம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து, இத்தாலிக்குச் சட்டவிரோதமாக ஆட்களை அனுப்புபவர் யார் என்று கண்டறியும் நடவடிக்கைகளை, புலனாய்வுத் துறையினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

தங்காலைப் பகுதியில் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்ட இலங்கையிலிருந்து, இத்தாலிக்குச் செல்ல இருந்த - 254 பாகிஸ்தானியரும் - விமானம்மூலம் இலங்கைக்கு வந்திருக்கின்றார்கள். அவர்கள் கைதுசெய்யப்பட்டு, விசாரணை முடிவில் மீண்டும் பாகிஸ்தானுக்கு அனுப்புவதற்குத் தற்போது ஏற்பாடுகளைப் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட 254 பேரில், ஒருவரிடமும் இப்போது விமான டிக்கற்றுக்கள் இல்லை. இந்த விமான டிக்கற்றுக்கள் - ஏற்கனவே, கடந்த ஒன்பதாம் திகதி சட்டத்தரணி ஒருவர்மூலம், பாகிஸ்தான் தூதராலயத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அந்த டிக்கற்றுக்களில் இடப்பட்டிருக்கும் கையெழுத்துக்கள், குற்றவாளியை இனங்காண உதவும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் டிக்கற்றுக்களை ஒப்படைத்தவருக்கும், இத்தாலிக்கு சட்டவிரோதமான முறையில் ஆட்களை அனுப்புபவருக்கும் தொடர்பு இருக்கலாம் எனக் கருதப்பட்டு, குற்றப்புலனாய்வுப் பகுதியினர் தமது விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். விரைவில் குற்றவாளி இனங்காணப்படுவார் எனப் புலனாய்வுப் துறையினர் தெரிவிததனர். ( )

# பஸ் விபத்தொன்றில் இருவர் உயிரிழப்பு!

(கொழும்பு)

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னாள் ஏற்பட்ட பஸ் விபத்து ஒன்றில், இருவர் பலியாகியுள்ளனர்.

கொழும்பு கோட்ட ரயில் நிலையத்துக்கு முன்னாள், நேரெதிரில் வந்துகொண்டிருந்த பஸ்களே விபத்துக்கு உள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் - கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



நேற்று நல்லூரில் நடைபெற்ற தியாகி தீலீபனின் நினைவுதின நிகழ்வில் பாடசாலை மாணவிகள் மலரஞ்சலி செலுத்தும் காட்சி

# இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைப்பது தொடர்பாக அமெரிக்க நிறுவனம் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கை - இந்திய பாலம் அமைக்கும் திட்டத்தை, அமெரிக்க நிறுவனம் ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் - கலிபோர்னியா மாநிலத்தைத் தலைமை நிறுவனமாகக் கொண்டு இயங்கும் - "நெக்ஸன்ற் இட்" என்னும் சர்வதேச கட்டுமான நிறுவன ஆலோசனை நிறுவனம், இந்தத் திட்டத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க முன்வந்துள்ளதுடன், இது குறித்த அடிப்படைத் தகவல்களையும் வழங்கியுள்ளது.

இத்தகைய ஓர் திட்டத்தை முன்னெடுக்க - குறைந்தது 300 இல் இருந்து, 900 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று தெரிவித்துள்ள இந்த நிறுவனம், இத்தகைய திட்டத்தில் பல இணைத்திட்டங்களை உள்ளடக்குவதன் மூலமே நீண்டகாலத்தில் செலவாணிப் பணத்தின் நன்மைகளை அடையமுடியும் என்றும் தெரிவித்தது.

சில இணைத்திட்டங்களையும், அந்த நிறுவனம் முன்மொழிந்துள்ளது. உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பல தனியார் வைப்பு நிறுவனங்கள் இதற்கு நிதியுதவி வழங்குமென்றும் இந்தத் திட்டத்தை 30 இலிருந்து, 36 மாதங்களில் - 3 கட்டங்களாக நிர்மாணிக்கலாம் என்று, இந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## பங்காளதேஷ் பிக்குகள் மீதான

# தாக்குதலை கண்டித்து கொழும்பில் ஊர்வலம்!

பங்களாதேஷிலுள்ள பௌத்த விகாரைகள் மீதும், ஆதிவாசிகள் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து, இலங்கையில் பிக்குகள் ஊர்வலமொன்றை நடாத்தியுள்ளனர்.

பங்களாதேஷ் - சிற்றகொட் நகரில் இடம்பெற்ற மேற்படி தாக்குல்களைக் கண்டித்தே, இலங்கையிலுள்ள பிக்குமார் ஊர்வலம் நடாத்தியுள்ளார்கள்.

விகாரமாதேவி பூங்காவில் ஆரம்பித்த இந்த ஊர்வலம், பங்களாதேஷ் தூதுவராலயத்திற்கு முன்னால் நிறைவுபெற்றது. பங்களாதேஷ் தூதுவராலயத்தில் மகஜர் ஒன்றும் பிக்குமார்களினால் கையளிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அரசு அங்குள்ள பௌத்த சின்னங்களையும், விகாரைகளையும் பாதுகாக்கத் தவறிவிட்டதாக - பிக்குமார் தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

# அரசு திட்டவரைபைத் தட்டிக்கழிக்க முற்பட்டால் சர்வதேச விதிகளுக்கமைய பிரியவேண்டிவரும்

## இளம்பரிதி தெரிவிப்பு



இடைக்கால நிர்வாக திட்டவரைபை அரசு தட்டிக்கழிக்குமாயின், சர்வதேச சட்டவிதிகளுக்கு அமைய நாம் பிரிந்து செல்ல வாய்ப்பளிக்கும் நிலை உருவாகும் என, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

வலிகாமம் வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து, நலன்புரிநிலையங்களில் வாழும் மக்களின் பிரதிநிதிகளால் கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு தெரிவிக்கும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

வலி-வடக்கு மக்களே - உங்களின் வீட்டு வாசற்கதவுகள் எப்போது திறக்கப்படுகின்றதோ, அப்போதே மீண்டும் பேச்சுவார்த்தைக்கான கதவுகளும் திறக்கப்படும் என நம்பிக்கை கொள்வோம்.

ஒரு மனிதன் தனது சொந்த இடத்தில் வாழ்வது, அவனது அடிப்படை மனித உரிமை. இந்த நிலையில், வலி.வடக்கு மக்கள் மீளக்குடியமர்வதைத் தடுப்பது, சர்வதேச ரீதியிலான அடிப்படை மனித உரிமை மீறலாகும். புரிந்துணர்வு ஒப்பந்தத்திலே மக்களின் இயல்புவாழ்க்கை ஏற்படுத்தப்படவேண்டும் எனக் கூறப்படுகிறது. இதனடிப்படையில், எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இராணுவநிலைகளை அகற்றியும், முன்னரங்கநிலைகளுக்கு அருகில் கண்ணிவெடிகளை அகற்றியும், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினதும், அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். ஆனால், யாழ். குடாநாட்டில் அவ்வாறல்ல. புதிதாக இராணுவ முகாம்களை அமைப்பதும், சோதனைச்சாவடிகளை நிறுவுவதும், இராணுவவேலிகளை முன்னகர்த்துவதுமாக, மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி வருகிறார்கள்.

புனர்வாழ்வு, புனரமைப்புக்கென உருவாக்கப்பட்ட "சிரான்" என்ற உபகுழு - தற்போது செயலிழந்து இருக்கிறது. மக்களின் இயல்பு வாழ்க்கை உருவாக்கப்பட்டதனால் தான், அந்த அமைப்பு தனது செயற்பாட்டை இழந்தது.

ஒஸ்லோவில் பெறப்பட்ட 70 மில்லியன் அமெரிக்க டொலர்களும்- வடக்கு அபிவிருத்தி என்று வெலிஓயாவிலும், கிழக்கு அபிவிருத்தி என்று சேருநுவர என்ற இடத்திலும், சிங்களவர்களை மீளக்குடியமர்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாகவும், அரசியல் நெருக்கடியாலும், ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்வதைப் புலிகள் தவிர்த்ததுடன், அண்மையில் நடைபெற்ற கொழும்பு மாநாட்டையும் புறக்கணித்தனர்.

சமாதானத்தைப் பொறுத்தவரையில் - தலைவர் பிரபாகரனும், தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் ஒன்றுபட்டு நிற்கின்றனர். எனவே, நாம் தொடர்ந்தும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். எங்களால் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பான இறுதி வரைபு இன்னும் இருவாரங்களுக்குள் - அரசதரப்பிற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இது தமிழர் தரப்பால் முன்வைக்கப்படும் முதலாவது திட்டவரைபாகும். எனவே, சர்வதேசம் இதனை நன்கு அவதானித்து வருகிறது. இந்த வரைபை அரசு தட்டிக்கழிக்குமாயின், சர்வதேச சட்ட விதிகளுக்கமைய நாம் பிரிந்து செல்ல வாய்ப்பளிக்கும்நிலை உருவாகும். இதனால், நாம் அரசியல்ரீதியில் பலம் பெறுவோம். எனவே, நாம் இராணுவ, அரசியல்ரீதியாகப் பலம் பெறுகின்றபோது, எமது சொந்த இடங்களுக்குச் செல்லும் காலம் விரைவில் வரும் என்று தெரிவித்தார்.

(68)



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் - பரிசகர் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய மாணவரின் நிறைவுவிழாவில், அந்த வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக்கூட தாதி ரீ.கணபதிப்பிள்ளை உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (17)

# யாழில் ஐஸ் உற்பத்தி போதியளவு இல்லை

## யாழ்.குடாநாட்டு மீனவர்கள் பாதிப்பு

யாழ்.குடாநாட்டில் பிடிக்கப்படும் மீன்களை பதனிட்டு, தென்பகுதிக்கு அனுப்பி வைப்பதற்குத் தேவையான ஐஸ்கட்டிகளின் உற்பத்தி குறைவாகவே உள்ளது.

கடந்தகாலங்களில் இலங்கைக் கடற்படையின் நடவடிக்கைகளினால், மீனவர்கள் வெகுதூரம் சென்று, மீன் பிடிக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்பு - மீனவர்கள் ஓரளவு சுதந்திரமாக மீன்பிடித்தொழிலை மேற்கொள்கின்றனர். தற்போது பிடிக்கப்படும் மீன்களை, தென்னிலங்கைக்கு அனுப்பிவைக்க யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் ஐஸ்கட்டிகளின் அளவு பற்றாக்குறையாகவே உள்ளது.

தற்போது யாழில் - வடமாகாண கடற்தொழிலாளர் சமாசம், வடமராட்சி மீனவர்களும், குருநகரில் தனியார் ஒருவருமே ஐஸ்கட்டிகளை உற்பத்தி செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஆரியகுளம் சந்தியில் பாரிய குழி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதியில் ஆரியகுளம் சந்தியிலுள்ள பிரதான வீதியில், தொலைத்தொடர்பு நிலையத்திற்கான தொட்டி வைத்துக் கட்டிய இடம் உடைந்துள்ளமையால், பாரியகுழி பல நாட்களாகக் காணப்படுகிறது.

இந்த வீதியால் பெருமளவு வாகனங்களும், அதிகமான போக்குவரத்துக்களும் இடம்பெறுவதால், உரியவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து, உரிய நடவடிக்கைகளை மேற் கொள்வார்களாயின், வீண் விபத்துக்களையும், அசம்பாவிதங்களையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

### மகா கும்பாபிஷேக தின சகஸ்ர சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கொற்றாவத்தை அயிட்டியப் புலம் ஸ்ரீமுருகமூர்த்தி தேவஸ்தான மகாகும்பாபிஷேகதிக சகஸ்ர சங்காபிஷேகம் இன்று காலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை அமைந்துள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

முருகப்பெருமானுக்கு 1008 சகஸ்ர சங்காபிஷேகமும், பரிவார மூர்த்திகளுக்கு உருத்திராபிஷேகமும் இன்று நடைபெறுமென தேவஸ்தான பரிபாலனசபையினர் தெரிவித்தனர்.

(116)

## இரவு வேளைகளில்

# நெல்லியடி பிரதேசங்களில் படையினர் திடீர் சோதனை

(நெல்லியடி)

நெல்லியடி நகர் மற்றும் நகரை அண்டிய பகுதிகளில்- இரவுவேளை இராணுவத்தினரும், பொலிஸாரும், திடீர்ச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சில தினங்களாக- இரவு 8 மணிக்குப் பின்னர், நகர் மற்றும் நகருக்குவரும் பஸ் வண்டிகள், மோட்டார் சைக்கிளில் வருவோரையும் தடுத்து, விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர்.

நெல்லியடி நகருக்கு வெளியே இராணுவத்தினரும், பொலிஸாரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (13)

# சேதமடைந்திருந்த கனகபுரகுளம் நியாப் திட்டத்தின்கீழ் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

சத்ஜெய இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த கிளிநொச்சி கனகபுரகுளம் - புனரமைப்பு வேலைகள் நியாப் திட்டத்தின்கீழ் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக் கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தர் மு.கதிர்காமநாதன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. கிளிநொச்சி கமநல சேவைகள் உதவி ஆணையாளர்- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் பிரதிநிதி, கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள், கனகபுரம் கிராம சேவையாளர் எனப் பலரும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர். (17)

# மணற்காடு நலன்புரிநிலைய வீடுகளை திருத்திக்கொடுப்பதற்கு நடவடிக்கை!

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனை மணற்காடு பகுதிகளில் நலன்புரி நிலையங்களில் இருக்கும் மக்களின் வீடுகளைத் திருத்திக் கொடுப்பதற்கு மருதங்கேணி பிரதேச செயலர் பணிமனை நடவடிக்கை எடுத்துள்ளது.

மணற்காடு பகுதியில், நலன்புரி நிலையங்களில் இருக்கும் மக்களில் - ஆறு குடும்பங்களின் வீடுகளும், குடத்தனையில் இரு நலன்புரி நிலையங்களில் இருக்கின்ற 30 குடும்பங்களின வீடுகளைப் புனர்வாழ்வு புனரமைச்சு நிதியிலிருந்து திருத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மழைகாலம் வருவதால் அதற்கு முன் வீடுகளைத் திருத்தித் தருமாறு பிரதேச செயலாளரை அந்தப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே இவற்றைச் செய்துகொடுக்க முன்வந்துள்ளார். (17)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஒன்பதாவது அகவையில்

பெயர் : ப.பானுமதி

முகவரி : 101/1, திருவையாறு, கிளிநொச்சி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------

பெற்றார் ஒப்ப..


# தெங்கு செய்கையாளர் சங்கத்தினருடன் முக்கிய கலந்துரையாடல் நடைபெறவுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தெங்குச் செய்கை சங்க அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் - எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தெங்கு பயிர்ச்செய்கையாளர் சபைத் தலைவர் லிங்கொன் பெர்ணாண்டோ வரவிருப்பதால், தெங்கு பயிர்ச்செய்கை தொடர்பாக, அவருடன் கலந்துரையாடும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து சங்க உறுப்பினர்களையும், தோட்ட உரிமையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு, வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கத்தின் தலைவர் அ.நல்லதம்பி கேட்டுள்ளார்.

# வடமராட்சி கிழக்கு பாடசாலைகளுக்கு இரண்டாவது தொகுதி தளபாடங்கள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலுள்ள பாடசாலைகளுக்கென, இரண்டாவது தொகுதியாகத் தளபாடங்கள் வந்து சேர்ந்துள்ளன.

ஜி.ரி.இசற் நிறுவனத்தினால், மீளக்குடியமர்ந்த பின் - இயங்கும் 10 பாடசாலைகளுக்கென, முதற்கட்டமாகத் தருவிக்கப்பட்ட தளபாடங்கள்- பாடசாலைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டது.


இரண்டாம் கட்டமாகக் கிடைக்கப்பட்ட தளபாடங்களும் பிரித்துக் கொடுக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (17)

### மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு

(வடமராட்சி)


வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு - சுமார் எழுபத்து ஐந்து ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரும், தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்துவருபவருமான கிருஷ்ணசாமி அருளானந்தசாமி அன்பளிப்பாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

# ஒலி விஞ்ஞானம் - வாத்துக்கள்



வாத்து கொக்கரிப்பது ஒரு வித்தியாசமான ஒலி அமைப்பு என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அதிலும், அவற்றினுடைய ஒலி ஒரேபோலிருப்பது, அந்தச் சத்தத்தினுடைய எதிரொலி என்ற கருத்து இப்பொழுது மறுதலிக்கப்பட்டுள்ளது. இந்தச் சத்தங்களுடைய ஒலி அதிரக்கூடியவாறு உள்ளது. இதன்மூலம் கோழி, வாத்து போன்ற பறவை இனங்கள் தங்களுடைய கொக்கரிப்புச் சத்தத்தின்மூலம், பலவாறான தகவல்களை, அழைப்புக்களை வெளியிடுகின்றன. இந்தப் பாஷை பற்றி தற்பொழுது ஆராயச்சி நடந்துகொண்டிருக்கிறது.

# திருடர்கள் உஷார்




மன்காஸ்டர் பொலிஸாரால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருவகையான கணினி மென்பொருள், களவாடப்பட்ட பொருட்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுகிறது. வீட்டிலே காணப்படுகிற இலத்திரனியல் பொருட்களுக்கும், இந்தக் கணினி மென்பொருளுக்குமிடையே காணப்படுகிற தொடர்பு, அவை களவாடப்பட்டதும் தேடுதலை இலகுவாக்குகிறது. ஆனால், இந்த வலையமைப்பும் - அறிவுசார்ந்த திருடர்களால் உடைக்கப்படக்கூடும்.

# பறவைகளைப் பாதுகாப்போம்



அழிந்துவரும் பறவையினங்களை எவ்வாறாயினும் பாதுகாக்கவேண்டும் என்ற முடிவுக்கு, பிரிட்டன் இயற்கை விஞ்ஞானத்துறை வந்திருக்கின்றது. மனிதனின் பல நடவடிக்கைகளால், பறவைகள் தம்முடைய சொந்த இயற்கைச் சூழலைவிட்டு, புதிய இடங்களில் வாழத்தலைப்பட்டுள்ளன. இதன் காரணமாக - வருடாவருடம் நிறையப் பறவைகள் அழிகின்றன. தற்போது இங்கிலாந்தில் இயற்கைக்காடுகள் அமைக்கப்பட்டு, அங்கே பறவைகள் தங்கிவாழ ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதன்மூலம் பறவைகள் அழியாமலும், ஒரு இடத்தைவிட்டு, வேறிடத்தை நாடாமலும் இருக்க வழி பிறக்கக்கூடும்.


# எண்ணெய்க் கிணறுகள்




ஆபிரிக்காவில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டும் செயற்பாட்டினால், பல நாடுகள் மற்றும் காட்டு விலங்குகளின் நிலை கேள்விக்குறியாக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் ஆபிரிக்காவின் ராபி எண்ணெய்க் கிணறுகளுக்கண்மையில், பாரியளவில் உயிர்களுடைய வாழ்க்கையில் சிக்கல்கள் தோன்றியிருக்கின்றன. எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்படும்போது, சுற்றுப்புறம் மட்டுமன்றி, பூமிக்கடியிலும் விலங்குகளுக்கு நெருக்கடிகள் தோன்றும். அமெரிக்காவில் நடைபெற்ற எண்ணெய்க் கிணறு ஆராய்ச்சியில் 95 வகையான ஊர்வன இறந்திருக்கின்றன. உலகளாவிய ரீதியில் பார்த்தால், 10 மில்லியன் ஹெக்ரெயர் பரப்பளவு நிலம்- வருடாவருடம் மழையில்லாதுபோக, இந்த ஆராய்ச்சிதான் காரணம் எனக் கூறப்படுகின்றது. இது தேவையா?



# சுப்பர் சொனிக் விமானங்கள்



ஒலியைவிட, வேகமாகச் செலலக்கூடியது சுப்பர் சொனிக் விமானம். அண்மையில் அத்லாண்டிக் சமுத்திரத்துக்கு மேலாக வெற்றிகரமாக பறந்து, சாதனை புரிந்த **F-5E** ரக சுப்பர் சொனிக் ஜெட்விமானம்- விமானத்தயாரிப்பு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியைப் பறைசாற்றுவதாக உள்ளது. இந்த வகை விமானங்கள் ஏறத்தாழ 1200 **km**, 1 மணித்தியாலத்திற்கு என்ற வேகத்தில் ஒலியைவிட வேகமாகச் செல்லக்கூடியது. ஆனால், இந்த விமானத்தினுடைய குறைபாடு - இடிமுழக்கம் போன்ற பெரிய சததமாகும். அந்தச் சத்தத்தைக் குறைப்பதற்கு அராய்ச்சியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.




# பயங்கரமான விலங்குகளுக்கு கூடுதலான பணம் தேவை



சர்வ்தேச சமுதாயத்தின் முக்கால் பங்கு, கூடுதலாக வனவிலங்குகள் பற்றி அக்கறைப்படத் தொடங்கியுள்ளது. அதிலும், வளாந்துவரும் நாடுகள் கூடுதலாகக் காடுகளை நம்பியே இருக்கின்றன. உண்மையில், வன விலங்குகள் வாழும் இடங்கள் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாகவும், பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாகவும் இருக்கின்றன. விஞ்ஞானிகள், பொருளாதார நிபுணர்கள், அரசாங்கங்கள் ஆகியன பாதுகாக்கப்பட்ட வன விலங்குப் பிரதேசங்களில் அதிகமாக அக்கறை செலுத்துபவர்களாக உள்ளனர். ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் பெருமளவு பணத்தைச் செலவழித்து, இந்த வேலையில் இறங்கியுள்ளது. கிட்டத்தட்ட 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் - வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்காக வருடாந்தம் செலவழிக்கப்படுகிறது.

இது அடுத்த 10 வருடங்களில் - 23 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருடாவருடம் வருமானமாகப் பெற்றுத்தரும் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். ஆனால், இது எந்தளவிற்குச் சாத்தியம் என்பது பின்வரும் விடயங்களில் தங்கியுள்ளது. நாட்டின் அபிவிருத்தி, பொருளாதார வளமின்மை, போதியளவு அலுவலரின்மை, காட்டிலாகா அலுவலகங்கள் இல்லாமை, தொலைத்தொடர்பு வசதிகள் பற்றாக்குறை, வாகனங்கள் பற்றாக்குறை ஆகியன இதற்கான காரணங்களாகும். மேற்கு ஆபிரிக்கக் காடுகள் ஒரு காலத்தில் - யானைகள், குரங்குகள் ஆகியவற்றுக்குப் பெயர்போனதாகக் காணப்பட்டது. ஆனால், தற்போது இவை வெறுமையாகக் கிடக்கிறது. அதேபோல் இலத்தீன்,



அமெரிக்காவில் - காடுகள் விவசாயத் தேவைக்கு அழிக்கப்பட்டமையால், விலைமதிக்கமுடியாத புலியினங்கள், முதலையினங்கள் கள்ளத்தனமாக விற்கப்பட்டன. தற்போது இறால்போட்டுச் சுறா பிடிப்பது போன்று, பயங்கரமான விலங்குகள் - அவற்றின் பெறுமதிக்கேற்றவாறு பாதுகாக்கப்படுகின்றன. மிருகங்கள் பாடு இனிக் கொண்டாட்டம்தான்.




# விஞ்ஞானிகள் பார்வையில் பைபிள் சுரங்கம்

மஞ்சள் சிகரம்
பல்சுவை அரங்கு

இஸ்ரேல் நாட்டின் ஜெருசலேம் நகரில் ஒரு சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்களின் புனித நூலாகிய பைபிளில், இதுபற்றிக் கூறப்படுகிறது. அழகான ஒலிவ் மரங்களால் சூழப்பட்டது ஜெருசலேம் நகரம். சிலோம் சுரங்கம் என்று அழைக்கப்படுகின்ற இது - கீஸ்கியா என்ற மன்னனால், போர் அபாயம் ஏற்படுகின்ற நேரத்தில், கிகொன் என்ற நீரூற்றிலிருந்து நீரினை நாட்டுக்குப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திலேயே அமைக்கப்பட்டது என்று பைபிள் கூறுகின்றது.

இது கி.மு. 700 ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டது. தற்போது விஞ்ஞானிகள் இதனுடைய கட்டுமானப் பணிகளைக் கண்டு, வியந்து நிற்கிறார்கள். அதிலும் இதனைப் புனரமைத்து, மீண்டும் நீரினைக் கொண்டுவர முயற்சியும் செய்கிறார்கள்.



# வானிலை எதிர்வுகூறலின் புதிய பரிணாமம்




வானிலை எதிர்வுகூறலில் வித்தியாசமான ஆராய்ச்சிகளில் இறங்கி, பிரிட்டன் அரசாங்கம் வெற்றியீட்டியிருக்கிறது. இணையத்தளத்தின் மூலம், வானிலை எதிர்வுகூறல்களைப் பரப்பும் முகமாக, ஒரு முக்கியமான ஆராய்ச்சி ஒன்று, கடந்த 12 ஆம் திகதி லண்டனில் இருக்கின்ற விஞ்ஞான நூதனசாலையில் இடம் பெற்றது.

ஆனால், ஒரு சில வானிலை எதிர்வுகூறல்கள் மட்டுமே கணினி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டன. சில சிக்கலான காலநிலை மாற்றங்கள் இணையத்தளத்தின் மூலம் பெற்றுக்கொள்ளமுடியாதது, இந்தப் பரிசோதனைக்குக் கிடைத்த பாதித் தோல்வி. ஆனால், முதற்தடவையாக - இணையத்தளத்தின் மூலம், வீட்டிலிருந்தபடியே எதிர்காலக் காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களை அவரவர் கணினி மூலம், ஓரளவு துல்லியமாகப் பெறக்கூடியதாகவுள்ளது.

# ஆண்களை மிஞ்சும் பெண் கணித மேதைகள்

ஏறத்தாழ 18,000 மக்கள் - ஒரு வேடிக்கையான கணிதப் புதிர் விளையாட்டுக்கு, லண்டனிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதிலே ஆண்கள், பெண்களாகப் பெருமளவு மக்கள் கலந்துகொண்டனர். அவர்களிடம் பலவாறான கணித நுட்பங்கள் கேள்விகளாகக் கேட்கப்பட்டு, அதில் கிடைத்த முடிவின்படி, பெண்களே கூடுதல்ன கணிதப் புதிர்களுக்கு விடையளித்துள்ளனர். சபாஸ் பெண்கள்.



# திரை விமர்சனம்

## திருடா திருடி



அண்மையில் திரைக்கு வந்துள்ள புதிய வரவுகளில் ஒன்றுதான் 'திருடா திருடி'. திரையுலகிற்குப் புதிய வரவான தனுஷ், தனது திறமையை வெளிக்கொணர முயன்றிருக்கும் திரைப்படம், இந்தத் திரைப்படம். கதாநாயகனும், நாயகியும் தமது காதலை இருவருடைய மனதினுள்ளும் ஒழித்தே வைத்திருக்கிறார்கள். படம் முடியும்வரை, இந்த நிலையேதான்.

தமது காதலை - தமக்குள்ளேயே மறைத்துக் கொண்ட நாயகனும், நாயகியும் தமக்குள்ளே முட்டி மோதுவதுதான், இந்தக் கதையின் மையமே. துள்ளளும், துடிப்புமாகப் போகிற படத்தில் - அங்கங்கே சில உணர்ச்சிமயமான காட்சிகளைப் புகுத்தி, பெண்கள் கூட்டத்தையும் கவர முயன்றிருக்கிறார் இயக்குநர் சுப்பிரமணியம் சிவா. எத்தகைய உணர்ச்சிமயமான காட்சிகளைக் காட்டமுனைந்தாலும், இஙகே நடந்திருப்பது ஒரு விடலைப் புரட்சி என்பதுதான் உண்மை.

திருச்சி நகர வீதிகளிலே - ஆட்டமும், பாட்டமும் கொண்டாட்டமுமாகத் திரிகிறார் நாயகன் தனுஷ், தலைமையிலான குழு. பொதுவாகவே, இவ்வாறு சுற்றித்திரியுது இளமட்டங்களுக்கு எல்லாம் பெற்றோர்கள் தானே. குறிப்பாக, தந்தைமார்தானே எதிரி. அந்த நிஜத்தையும், நிழலாக்கி இருக்கிறார் இயக்குநர்.

அண்ணனின் வேலை விடயமாகத் தந்தையார் கொடுத்த பணத்தை வைத்தியசாலைச் செலவாகச் செலுத்திவிட்டு, அதற்குக் கணக்குக் காட்ட தனுஷ் படும்பாட்டைப் பார்க்கப் பாவம்போலிருக்கிறது. ஆனாலும், இந்தச் சம்பவம்தான் முழுக்கதையையுமே நகர்த்திச் செல்வதாகவேயுள்ளது.

நாயகன் தனுஷிற்கோ இது புதுக்களம். தன்னுடைய வழமையான பாணியிலிருந்து வெளியேவர ஆசைப்பட்ட தனுஷிற்கு "திருடா திருடி" துணையாகியிருக்கிறது. தென்னகத்து புருஷ்லி எனப் புகழப்படுகிறார் தனுஷ். சண்டைக் காட்சிகளைப் பார்க்கும்போது, அது சரியாகத்தான் தென்படுகிறது.

புதுமுகம் சாயாசிங் கோபத்தில் சூரியன், கொஞ்சலில் நிலா எனப் பாராட்டலாம்போல இருக்கிறது. அடுத்தடுத்து நல்ல பட வாய்ப்புக்களைத் தேடிக்கொண்டால், கொஞ்சக்காலம் "சாயா மழை" தமிழ்த் திரையுலகில் பொழியும் வாய்ப்பிருக்கிறதுபோலத் தெரிகிறது.

இந்தப் படத்திலே - பாடகர் மாணிக்கவிநாயகம் நடிகராகயிருக்கின்றார். தனக்குப் பாடமட்டுமல்ல, நடிக்கவும் தெரியும் என்பதையும் மாணிக்கவிநாயகம் படம்போட்டுக் காட்டியிருக்கிறார். நல்லதொரு தேர்ந்த கலைஞனுக்குரிய நடிப்பு.

இரண்டு கதாநாயகிகளுள் ஒருவராக வரும் சுகியின் நடிப்போ பிரகாசிக்கத் தவறிவிட்டது.

இந்தப் படத்திலிருந்துதான் இசையமைக்க ஆரம்பித்துள்ளார் தீனா. சின்னத்திரைத் தொடர்களுக்கு இசையமைத்த தீனாவின் அனுபவம், பாடல்களில் அவ்வளவு கைகொடுக்கவில்லை. பாடல்கள் அனைத்தும் கடுகதி வேகத்தில் பயணிப்பதாகப்படுகிறது. இது சிலவேளைகளில், தீனாவின் பாணியாகவும் இருக்கலாம்.

பாடல்களுக்கு நடன அமைப்புகளைச் செய்த சிவசங்கரைப் பாராட்டக் கூடியதாகவுள்ளது. மொத்தத்திலே "திருடா திருடி" யில் திருந்தக் கற்றுத்தரவில்லை. திருடக் கற்றுத்தந்திருப்பது போல்பட்டாலும், பொழுதுபோக்காக ரசிக்கக்கூடிய படமாகவுள்ளது.

சுதர்ஷி

# உடல் நலம் வெற்றியின் வலம்...

காலையில் நாம் அலுவலகத்திற்குச் செல்லும் பொழுது, மனதில் முழுமையான புத்துணர்ச்சியுடன் செல்லவேண்டும். இப்படிச் சென்றால்தான், நம்முடைய வேலையும் முழுத்தன்மையுடன் இருக்கும்.

காலையில் மலரக்கூடிய பூக்கள் போன்று, நாமும் புதிதாகவும், உற்சாகத்துடனும், முழு ஆற்றலுடனும் செயல்களைச் செய்யமுடியும்.

அப்பொழுது,

இந்த நற்பண்புகள் எல்லாம் வேலையிலும் பதிய வைத்துக் கொண்டேயிருக்கும்.

ஆனால், இதற்கு மாறாக இரவு முழுவதும் கண் விழித்து ஆற்றல்களை எல்லாம் வீணாகச் செலவாக்கி விட்டு, தாமதமாகப் படுக்கையிலிருந்து எழுந்து வேலையை ஆரம்பித்தால், அது முழுமையாக இருக்காது.

அதில் விறுவிறுப்போ, வன்மையோ, தெளிவோ இருககாது. பாதிப்பணியைத்தான் செய்யமுடியுமே தவிர, முழுப்பணியைச் செய்யமுடியாது.

அதிகவேலை செய்து ஆற்றலை வீணாக்கி, களைபபு மிகுந்து, எந்தவிதத் தயாரிப்பும் இன்றியிருக்கும் ஒருவரை, நாம் ஓட்டப் பந்தயத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டால் -

அவர் என்ன சொல்வார்?

என்னால் வெற்றிபெற இயலாது என்றல்லவா கூறுவார்?

இதேபோலத்தான், நம்முடைய ஆற்றலை எல்லாம் வீணாகச் செலவாக்கிக் களைப்புற்றிருக்கும்போது, வாழ்க்கை என்ற பந்தயத்தில் நாம் எப்படி கலந்து கொள்ளமுடியும்? எவ்விதம் வெற்றிபெற இயலும்?

எனவே -

ஒவ்வொரு நாளும் நம்மை முழுத்தன்மையுடன் பாதுகாத்து வரவேண்டும். நம்முடைய சக்திகளை ஊதாரித்தனமாகச் செலவு செய்துவிடக்கூடாது.

சேமித்து வைக்கவேண்டும். அப்பொழுது வாழ்க்கையை ஆரோக்கியத்துடன் கழிக்கமுடியும்.

இதை அறியாமல் இரத்தத் தெம்புமின்றி, மூளைப் பலமின்றி வாழ்க்கைப் பந்தயத்தில் எப்படி ஓடுவது? தோல்வி நம்மை அழைத்துக்கொள்ளுமே.



நன்றாகக் கவனிக்கப்பட்ட ஒரு சாதாரண குதிரையானது, ஒழுங்காகக் கவனிக்கப்படாத ஓர் உயர்சாதிக் குதிரையை ஓட்டப்பந்தயத்தில் ஜெயித்துவிடும்.

ஒரு தளபதி சரியான பயிற்சிபெறாத, சக்திகுன்றியிருக்கும் படைகளை ஒருபோதும் போர்க்களத்திற்குக் கொண்டுசெல்லமாட்டான்.

அதிகமான வேலை செய்வதன் காரணமாக, சீக்கிரம் தளர்ச்சி ஏற்பட்டுவிடும்.

முன்னேறவேண்டும் என்ற ஆர்வம் இருக்கவேண்டியதுதான். ஆனால், அதற்காக நம்முடைய உடலை வருத்திக்கொண்டு வேலை செய்யவேண்டியதில்லை.

அப்படிவிடாமல் வேலை செய்தால், விரைவிலே களைப்படைந்து விடுவோம். மேற்கொண்டு வேலையை ஆர்வமாகத் தொடர்ந்து செய்யமுடியாது.

முன்னேறவேண்டும் என்ற ஆசையினால், கடுமையாக உழைத்தபோதிலும், ஓயாது வேலைசெய்து, ஓய்வு கொள்ளாமல் இருப்பது என்பது -

நமக்கு நாமே நன்மை செய்வதற்குப் பதிலாக, தீமையை உருவாக்கிக் கொள்வதாகும்.

வேலையை அல்லும்பகலும் அயராது செய்து கொண்டிருப்பது, அடிக்கடி ஓய்வு எடுத்துக்கொண்டு மெதுவாகவும், விடாமலும் வேலை செய்வதைவிட, அதிகப் பலனைப் பெற்றுவிடமுடியாது.

நம்முடைய மூளை, உடல் ஆகியவற்றின் ஆற்றலை மிகவும் குறைவாக மதிப்பிட்டு, செலவிட்டு விடுகின்றோம்.

ஆரோக்கியம் என்னும் கிணறு எப்பொழுதும் சுரந்து கொண்டிருக்கும் என்றெண்ணி, இளமையின் ஆற்றலை வீண்விரயம் செய்துவிடுகின்றோம்.

கிணறு வரட்சியடைய ஆரம்பித்ததும், நம்முடைய ஆற்றலின் மதிப்புத் தெரியவருகின்றது.

சில இடங்களில் மழைக்காலத்தில் ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். ஆனால், கோடைகாலத்தில் வற்றி வரண்டுவிடுகின்றன. அந்த மாதிரி இடங்களில் -

அணைக்கட்டுமூலம், கோடை காலத்திற்கு வேண்டிய நீரைத் தேக்கி வைத்துக் கொள்வது நடைமுறையான செயல். அதேபோல் - நம்முடைய உடல், மூளை ஆகியவற்றின் ஆற்றல் என்னும் ஆறு, நம்முடைய நடுவயதிலும், முழுமைப்பருவத்திலும் வற்ற ஆரம்பித்து விடும்.

ஆனால், இளமையில் அதைச் சீராகச் செலவிட்டு வந்தால், முதுமையிலும் நாம் துடிப்புடன் செயலாற்ற முடியும்.

உடல் ஓர் இயந்திரம் போன்றது. நம்முடைய உடல் சக்தியிலோ, மூளை சக்தியிலோ வரட்சி ஏற்பட்டுவிட்டால், அது எவ்வளவு சிறிதாக இருந்தபோதிலும், நாம் செய்யும் எல்லா வேலைகளிலும் அந்த வரட்சி பிரதிபலிக்கச் செய்யும்.

இளமையில் ஓய்வின்றி உழைத்துவிட்டு, முதுமையில் எந்தவித செயலும் செய்யமுடியாதவர்களாகப் போய்விடக்கூடாது.

மின்சார விளக்கு எரியச்செய்ததுபோல, ஒளி வெள்ளமாக இருந்த நாம், ஒரு மெழுகுவர்த்தியைக் கூட எரியச்செய்ய இயலாதவர்களாக இருந்துவிடக் கூடாது. ஒளியுடன் என்றும் இருக்கவேண்டும்.

# புற்றுநோயாளர்களைப் பாதிக்கும் புதிய வகை மருந்துகள்



புற்றுநோயைக் குணப்படுத்தும் மருந்து இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், நாளுக்குநாள் உலகத்தில் புதியபுதிய புற்றுநோய்ச் சிகிச்சை மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக - புற்றுநோயாளர்களின் இறப்பு வீதம் சுலபமாக்கப்படுகின்றதேயன்றி, வேறொன்றுமில்லை என்கிறது பிரித்தானிய ஆராய்ச்சி நிலையம்.

ஆனால், நாங்கள் நம்பிக்கையைத் தளரவிடவில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள். ஏறக்குறைய 80 புற்றுநோய் மருந்துகள் இருக்கின்றன. அவற்றில், ஒன்றுகூடப் புற்றுநோயை முற்றாகக் குணமாக்கமாட்டாதவையாக இருக்கின்றன. பெரும்பாலும் இதற்கான மருந்து கண்டுபிடிப்புக்களில் பிரிட்டன் வெற்றியடைந்துவிடும் என்றே நம்பப்படுகின்றது.

# உள்ளி உன்னத மருந்து



வெறும் சமையல் தேவைகளுக்கு மட்டும் பாவிக்கப்பட்ட உள்ளி, பிரிட்டன் ஆராய்ச்சியாளர்களின் கண்ணில்பட்டு, மிகப் பிரபல்யம் அடைந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. இது வாய்வு மற்றும் உடலின் பலதரப்பட்ட நோய்களைக் கட்டுப்படுத்த வல்லது. ஆனால், அண்மைய ஆராய்ச்சியின்படி, இதய அழுதத நோயைக் குணமாக்கக் கூடியதாகவும் உள்ளது.

உள்ளியைப் பயன்படுத்தி பிரித்தானியாவில் அதிகமாகக் காணப்படுகின்ற நத்தை இனங்கள் விரட்டப்படக்கூடியனவாகவும் இருக்கிறது. இதற்குக் காரணம்- நத்தை இன ஒவ்வாமையே ஆகும். அண்மையில் உள்ளி - இவ்வாறான நத்தை இனங்களிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கப் பயன்படுகிறது என்று, பிரிட்டன் விவசாயிகள் கூறியிருக்கின்றார்கள். நத்தையின் எதிரி உள்ளி.

# மலிவான மருந்து தடுக்கும் HIV குழந்தைகள்

HIV எதிர்ப்பு மருந்துகள் - உலகளாவியரீதியில் பெருவாரியாக விற்கப்பட்டுக்கொண்டு வந்தாலும், அவை எவ்வளவு தூரம் வெற்றியளிக்கிறது என்பது கேள்விக்குறி. அண்மையில், அமெரிக்காவில் நடைபெற்ற ஆராய்ச்சியின்படி, வைததியர்கள் HIV ஐ ஓரளவு எதிர்க்கக்கூடிய மலிவான மருந்தொன்றுள்ளது என்று கூறியுள்ளார். ஏறத்தாழ 3 மில்லியன் HIV தொற்றுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் ஆபிரிக்காவிலுள்ளதாக அறியப்பட்டுள்ளது.



ஆனால், இவர்களுக்கு மலிவான HIV தடுப்பு மருந்து என்பது - இனப்பான செய்தியாகத்தான் இருக்கக்கூடும். கர்ப்பிணித் தாய்மார்களில் - 59 தாய்மார்கள் சோதனைக்கு எடுக்கப்பட்டு, இந்த HIV தடுப்பு மருந்து (AZT) கொடுக்கப்பட்டபோது, அதிலே 36 குழந்தைகள் பாதுகாக்கப் பட்டுள்ளனர். சிறந்த மருந்துக்கு - அமெரிக்க ஜனாதிபதி புஸ்ஸின் அமோக ஆதரவு உள்ளதாகக் கூறப்படுகின்றது.

# சிவப்பழகா? ஆபத்துக் காத்திருக்கிறது!



'ஒரு வாரத்தில்.... ஒரே மாதத்தில் சிவப்பழகு' என்று செய்யப்படுகின்ற விளம்பரங்களைப் பார்த்து, கிறீம் வகைளை வாங்கிப் பயன்படுத்துகிறீர்களா?

ஒரு விடயத்தை மட்டும் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நமது தோலில் உள்ள நிறம், இயற்கை நமக்களித்த கொடை. இதனைச் செயற்கையாக மாற்ற முனையும்போது, அதற்காகப் பின் விளைவுகளையும் நாம் சந்திக்கத் தயாராகவேண்டும்.

முக அழகு கிறீம்களிலுள்ள இரசாயனப் பொருட்கள், தோற்புற்றுநோய்களை ஏற்படுத்தும் என்று ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவருகின்றது.

இதைவிட, முகத்துக்கு முகம் கிறீம்களைத் திடீரென்று நிறுத்திவிடவுடம் கூடாது. அப்படி நிறுத்திவிட்டால், முகத்தில் திட்டுத்திட்டாக கறுப்பும், தேம்பல் போன்ற வெள்ளைப்புள்ளிகளும் வந்து, முக அழகு பாதிக்கப்பட்டுவிடும் ஆபத்துள்ளது.

விளம்பர அழகில் மயங்கி, ஆபத்தை விலக்குவதா? வாங்குவதா?

# கத்தியின்றி அறுவைச் சிகிச்சை



உடலின் எந்தப்பாகமாக இருந்தாலும், சரி அறுத்துப் பார்க்காமல் உள்ளே என்ன இருக்கிறது என்று கணினித் திரையில் பார்த்து கொள்ளக்கூடிய வசதி, உலகின் பல பாகங்களிலும் வந்துவிட்டது. தற்போது மனித இதயத்தை மேசையில் வைத்து பழுதுபார்த்துவிட்டு, மீண்டும் உள்ளே வைத்து பொருத்தும் விந்தை பொருந்திய உலகில், அதனை வெளியே எடுக்காமலேயே கணினி மூலம அறுவைச்சிகிச்சை செய்யக்கூடிய புதுமையானமுறையே- கத்தியின்றி, இரத்தமின்றி செய்யப்படும் அறுவைச்சிகிச்சை.

இதன் மூலம் நோயாளிகளுக்கு உளவியல் ரீதியான பாதிப்புக்களைக் குறைக்கக்கூடியதாக உள்ளது. ஆனால், இதயத்துக்குச் செய்வதுபோல்; மூளைக்குச் செய்யமுடியாது. ஏனெனில், மூளையிலே காணப்படுகின்ற நுண்ணிய குருதி மயிர்த்துளைக் குழாய்கள் - கணினித்திரைமூலம் அறுவகைச்சிகிச்சை செய்யமுடியாதிருப்பதே ஆகும். இது அடிக்கடி அறுவைச்சிகிச்சை செய்யபவர்களுக்கு நல்ல செய்திதான்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### ஆலோசனை...!

விடுதலைப் புலிகளின் வசமிருக்கும் திருகோணமலையின் தென்பகுதி நிலப்பரப்பைப் படையினர் பாதுகாக்கவேண்டுமாம். அதாவது, பன்முக நோக்கில் கேந்திர முக்கியத்துவம் மிக்கதான திருகோணமலை துறைமுகம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், திருமலையின் தென்பகுதியை படையினர் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரவேண்டியது தவிர்க்க முடியாததாம்!

இந்த அறிவுறுத்தலுடன்கூடிய ஆலோசனையை, அமெரிக்க உயர் இராணுவ குழுவொன்று தெரிவித்துள்ளதாக, ஊடகச்செய்தியொன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பசுபிக் கட்டளை பீடத்தின் உறுப்பினர்கள் பலரைக்கொண்ட இந்தக்குழு - கடந்த வருடத்தில் இலங்கையில் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொண்டுவந்த வேளையில், திருகோணமலை தொடர்பான இராணுவம் மற்றும் பாதுகாப்புப் பற்றி, ஆழமான மதிப்பீடுகளையும் மேற்கொண்டது.

திருகோணமலையின் இராணுவ வளம், கடற்படையின் ஆற்றல், விமானப் படையின் செயற்றிறன், திருமலை துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவம், போர்மூலோபாயம் மற்றும் தந்திரோபாய நடவடிக்கைகளின் போதான திருமலைக் கடற்படை மற்றும் விமானப்படையின் முக்கியத்துவம் ஆகியவை தொடர்பான அவர்களின் விரிவான ஆய்வினையடுத்து, அது குறித்த விரிவான ஆய்வொன்றினை பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்திருந்தது.

ஆனாலும், அந்த அறிக்கை பாதுகாப்பு அமைச்சின் பார்வைக்கு வழங்கப்பட்ட பின்னர், அதுகுறித்து எதுவும் வெளியிடப்படவில்லை என்பதுடன், அதன்மீதான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதா என்பது குறித்தும் எதுவும் தெரியாமலும் இருந்தது.

திருகோணமலை துறைமுகப் பாதுகாப்பு தொடர்பாக, அந்த அறிக்கையில் சிறிலங்கா கடற்படையின் மிகமுக்கியமான தளம் - திருகோணமலை துறைமுகம் என்பதில் ஐயமில்லை எனவும், தற்போது அதன் தென்பகுதியை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும், இந்தப் பிராந்தியத்திலிருந்து விடுதலைப் புலிகள் திருமலைத் துறைமுகத்தினுள் வந்துபோகும் சகல கப்பல்களையும் கண்காணிக்கமுடியுமென்றும், அத்துடன் இங்கிருந்தபடியே அவற்றின்மீது ஆட்லறி தாக்குதல்களையோ அல்லது தற்கொலைத் தாக்குதல்களையோ மேற்கொள்ளமுடியுமென்றும், தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், கடற்படைத் தளம் மீதும் தாக்குதலை அவர்களால் நடத்தமுடியுமென்றும் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் - இதனைப் பாதுகாக்க சிறிலங்கா இராணுவத்தால் முடியாத நிலையில் ஆற்றல் வலுக்குறைந்ததாகவே உள்ளதென்றும், அதில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் அறியவந்துள்ளது.

இந்த அறிக்கையில், அவர்கள் தெரிவித்திருந் ஆலோசனைகள் மற்றும் சிபார்சில் சிறிலங்கா இராணுவம் இந்தப் பகுதியை எப்படியாவது தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அவசியம் என்றும், யாழ்.குடாநாட்டிலுள்ள இராணுவத்திற்கான விநியோகப் பாதையாகவும் இது இருப்பதனால், இந்த நடவடிக்கை அவசியமானதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாவிடில், சிறிலங்கா இராணுவம் போரில் தோற்றதாகவே இருக்கும் எனவும் எச்சரிக்கும் அந்த அறிக்கை, இவ்வளவு காலத்தின் பின் இப்போது முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகிறது.

இதற்குக் காரணம் - குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரமேயாகும். விடுதலைப் புலிகளின் குரங்குப்பாஞ்சான் முகாமால் - திருகோணமலையில் பாதுகாப்புக்கு மட்டுமல்ல இந்திய எண்ணைக் குதங்களின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தலென பிரசாரம் செய்து, கதிர்காமர் அதனை ஒரு பாரிய விவகாரமாக்கியது நினைவிருக்கலாம்.


இதே திருகோணமலையை, இந்தியாவிடம் கையளித்தாவது, விடுதலைப் புலிகளை தோற்கடிக்கவேண்டும் என-சிஹல உறுமயவும், கொடகே போன்ற பேரினவாதிகளும் பகிரங்கமாகவே அறிக்கைவிட்டு, இனவாத உணர்வுடன் செயற்பட்டபோது, எவரும் அதுகுறித்தும், அதன்மூலம் ஏற்படக்கூடிய நாட்டின் சுதந்திரத்தினதும், இறைமைக்குமான ஆபத்துக் குறித்தும், எந்தத் தென்பகுதி தேசிய ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் அக்கறையோ, எச்சரிக்கையோ, பதற்றமோ கொள்ளவில்லை.

திருமலையிலுள்ள எண்ணைக்குதங்களை இந்திய அரசுக்கு குத்தகை அளித்தபோது - அதனால் ஏற்படக்கூடிய ஆபத்தினை தொலைநோக்குடன் எந்த ஊடகவியலாளரும் சிந்திக்கமுன்வரவில்லை. அப்போது, அந்நிய சக்திகளால் திருமலைத் துறைமுகத்துக்கோ, அல்லது கடற்படைத் தளத்துக்கோ ஏற்படக்கூடிய எதிர்கால சிக்கல்கள் குறித்து எதிர்வுகூற எவரும் துணியவுமில்லை.

இதற்கு திருகோணமலை - தமிழர் பிரதேசம் என்பது ஒரு காரணமாக இருக்கலாம். அதனை எவராவது எடுத்துக்கொண்டால் போதும். தமிழர்களுக்கு உரிமையாகிவிடக்கூடாதென்ற இனவாத மனப்பான்மையே இதன்தோற்றுவாயாகும்.

இது, தென்பகுதி அரசியல்வாதிகளின் குறுகிய அரசியல் நோக்குடன்கூடிய தமிழின எதிர்ப்புணர்வின் வெளிப்பாடென்பதில் ஐயமில்லை. இப்போது, அமெரிக்காவின் அறிக்கை ஆராயப்படுகிறதென்றால், குரங்குப்பாஞ்சான் விவகாரத்தைக் காரணம் காட்டி, திருமலை விவகாரத்தைப் பெரிதாக்கி ஒரு பாரிய குழப்பத்தை ஏற்படுத்தும் சக்திக்கு ஆதாரம் தேடும் முயற்சி என்றே இதனை உணரமுடிகிறது.

## நாடும் நடப்பும்




# ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலேசியாவுக்குக் கல்விச் சுற்றுலா!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பதின்மூன்று நாடாளுமன்ற பின்வரிசை உறுப்பினர்கள் இந்த வார கடைசியில், ஒரு வார கால கல்விச் சுற்றுலா ஒன்றை மலேசியாவிற்கு மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்களது இந்தப் பயணம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் இரண்டு நாள் மலேசியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை அடுத்து இடம்பெறுகிறது.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் மலேசிய பயணம் குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம கடும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, கருத்து தெரிவித்த அவர்- இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பயணம் அவர்களது மன உளைச்சலை தீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியால் மேற்கொள்ளப்படும் ஒரு நாடகமாகும். இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை மீது கடும் அதிருப்தியடைந்துள்ளார்கள். இவ்வாறான ஒரு நடவடிக்கை சந்திரிகா அரசு 2000 ஆம் ஆண்டு கொண்டு வந்த அதிகாரப் பகிர்வு வேளையிலும், ஐக்கிய தேசியக் கட்சியினால், திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது. இவர்களது பயணம் கல்விச் சுற்றுலா என்ற பெயரில் தேவையில்லாமல் நடைபெறுகிறது. இந்த பயணத்திற்கு யார் பணம் கொடுக்கிறார்கள். அரசாங்கமா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியா அல்லது வேறு தனிப்பட்ட நபர்களா எனக் கேள்வி எழுப்பியுள்ளார் சரத் அமுனுகம.

சரத் அமுனுகமவின் மேற்படி குற்றச்சாட்டை - ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரபீடம் முற்றாக மறுத்துள்ளது. இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒருவாரகால கல்விச் சுற்றுலா அவர்களுக்கு பல நன்மைகளைக் கொடுக்கும் வேளை, பல விடயங்களையும் அவர்கள் கற்பதற்கு வழியேற்படும் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இந்தியாவிற்கு கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர். இவர்களது விஜயத்தின் நோக்கம், இந்தியாவின் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான விடயத்தை அறிந்து கொள்வதற்கேயெனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் இலங்கைக்கான இந்தியத் தூதரகத்துடன் தமது பயணம் சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

## ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திடமிருந்து நஷ்டஈடு கோருகிறார் இராணுவ அதிகாரி!

(கொழும்பு)

அரசாங்க ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திடமிருந்து - கிழக்கு மாகாண சிரேஷ்ட இராணுவ அதிகாரி ரியர் அட்மிரல் வசந்த கரண்ணாகொட நஷ்டஈடுகோரி, சட்டத்தரணி மூலம் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தால், கடந்த 5 ஆம் திகதி ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சி மூலம் - தனக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதென்றும், அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருவார காலத்துக்குள் நஷ்டஈடு தராது போனால், ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு எதிராக வழக்குத் தொடரவிருப்பதாகவும், படை அதிகாரி கரண்ணாகொட சட்டத்தரணி மூலம தெரியப்படுத்தியுள்ளார்.

திருகோணமலை பாதுகாப்பு நிலைவரம் பற்றி ஒளிபரப்பிய செய்திகளால் தனக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதென்றும், ரியர் அட்மிரல் கரண்ணாகொட தெரிவித்தார்.

32 வருடங்கள் கடற்படையில் கடமையாற்றிய ரியர் அட்மிரல் கரண்ணாகொட, இப்போது கடற்படையின் உயரதிகாரிகளின் வரிசையில் 3 ஆவது இடத்தில் இருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜே.வி.பியின் அதிக கோரிக்கைகளே கூட்டு முயற்சி முறிவடையக் காரணமாம்!

(கொழும்பு)

ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டிணைப்பு முறிவடைவதற்கு, ஜே.வி.பியின் அதிக கோரிக்கைகளும் ஒரு காரணமென்று கூறப்படுகிறது.

தங்களுக்கு நான்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படவேண்டுமென்றும், அந்த அமைச்சர்கள் - விவசாயம், சுகாதாரம், கல்வி, தகவல் ஆகியவையாக இருக்கவேண்டுமென்றும், ஜே.வி.பி.யினர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

இதற்குமேலாக, கூட்டிணைப்பின் தலைமைப்பதவி தருவதோடு, அடுத்த தேர்தலில் 40 தேர்தல் தொகுதிகளை தமக்கு ஒதுக்கித்தரவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

இதற்கு ஜனாதிபதி - ஜே.வி.பிக்கு இவ்வளவு கொடுத்தால் எனது அம்மா, தாத்தா ஆகியோர் சாபம் போடுவார்கள் என்று கூறியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## வட - கிழக்கை இணைக்குமுன் சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும்

### சரணகீர்த்தி தேரர் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாகமொன்றை ஏற்படுத்துவதற்கு முன், அந்தப்பகுதி பொதுமக்களின் கருத்துக்களை அறிந்துகொள்ள, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

இவ்வாறு - சேருவில ரஜமகா விகாரையின் வண.சங்கைக்குரிய சரணகீர்த்தி தேரர் உட்பட, அவரது குழுவினர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பாக, நவம்பர் மாதம் மூன்றாம் திகதி அல்லது அதற்கு முன், அரசின் சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்ட மா அதிபரிடம் கேட்டுள்ளது.

இவர்கள் செய்த மனு சம்பந்தமாக - சட்ட மா அதிபர் தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். நாட்டில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கே அதிகாரம் உள்ளதெனவும், எனவே - இந்த மனுவை விசாரிக்க மேல்நீதிமன்றத்துக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது எனவும், இந்த மனுவினை மேல்நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதைத் தவிர்க்க வேண்டுமென அவர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

## சுகாதார சேவை ஊழியர்களின் விடுமுறைகளை ரத்துச்செய்ய முடிவு

(கொழும்பு)

சுகாதார சேவையில் கடமையாற்றும் அனைவரினதும் விடுமுறைகளை ரத்துச்செய்ய - சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இன்று நள்ளிரவு முதல், இந்த் தீர்மானம் அமுலுக்கு வரும் என்று சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்தார்.

சம்பள முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு சுகாதார சேவையில் நெருக்கடிகளை ஏற்படுத்த, சில தொழிற்சங்கங்கள் திட்டமிடப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவைலயடுத்தே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தயாரத்ன தெரிவித்தார்.

எனினும், தற்போது நிலவும் குறைகள் குறித்து - தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவிருப்பதாக - அமைச்சர் தயாரத்ன குறிப்பிட்டதோடு, நாளை திறைசேரி அதிகாரிகளை சந்தித்திக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

# தங்கள் வாழ்விடங்களை தொலைத்துவிட்டு மீள்வாழ்வுக்காக காத்திருக்கும் மக்கள்

உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள பன்னாலைப் பகுதியில் ஒரு வீடும், மறவன்புலோ - கோகிலாக்கண்டி பகுதியில் பல வீடு களும் உடைக்கப்பட்டு, அங்கிருந்து பொருட்களும் களவாடப்பட்டுள்ளன. இவை இறுதியாக நடந்ததாகக் கூறப்படும் சம்பவங்கள், உயர் பாதுகாப்பு வலயத்தில் - இவ்வாறான செயல்கள் நடைபெற்றுவருவது, இயல்பு நிலைமையைத் தோற்று



விக்குமா? இந்தச் சம்பவங்களுக்கு முன்னரும் - இதனைப்போல, பல சம்பவங்கள் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் நிகழ்ந்திருக்கின்றன. இனியும் நிகழத்தான் போகின்றன.

வெளியில் தெரிந்த சம்பவங்களாகவே இவை காணப்படுகின்றன. வெளியில் தெரியாமல் இன்னமும் எத்தனை சம்பவங்கள் இடம்பெற்றிருக்குமோ, அது தொடர்பாக யாறி வாரோ? உயர் பாதுகாப்பு வலயத்தில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கிற சூழ்நிலையில், இந்தச் சம்பவங்களை நிகழ்த்துபவர் யார்? இவைகளுக்கெல்லாம் சூத்திரதாரிகளாக இருப்பவர் யார்? எத்தனை பேருக்கு இதனால், இலாபம் என்று ஒருமுறை சிந்திக்கிறபோது, இந்த வினாக்களுக்கு, விடை தெரியாதவர் எவரும் இருக்கமுடியாது. அதனால், அவ்வாறான கேள்விகளும், அந்தக் கேள்விகளுக்குரிய பதில்களும் இந்தவிடத்து அவசியமற்ற தொன்றாகவே காணப்படும் என்பது தெளிவு. வலிகாமம் வடக்கு, தென்மராட்சியின் பல பிரதேசங்கள் - முகமாலைப் பகுதி, கிளாலிக் கடற்கரையோரம் முதலான பகுதிகள் உள்ளிட்ட ஒரு பரந்த நிலப்பரப்பு- உயர் பாதுகாப்பு வலயமாக வரையறுக்கப்படுகின்றது. 1991 ஆம் ஆண்டிலிருந்து, இந்தப் பிரதேசத்துக்குள் யாருமே செல்லமுடியாதபடி, இந்தப் பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக வரையறை செய்யப்பட்டுள்ளன.

1991 ஆம் ஆண்டுக்கு முன்னரேயே இந்தப் பகுதியிலிருந்து - மக்கள் யுத்தம் காரணமாக வெளியேறிவிட்டனர். குறிப்பாக, வலிகாமம் வடக்குப் பகுதியிலுள்ள, அதுவும் பலாலிப் பிரதேசத்து - மக்கள் 80 களிலேயே தமது வீடுகளையும், நிலங்களையும், சொத்துக்களையும் விட்டுவிட்டு, வேறு பிரதேசங்களில் குடியேறத் தொடங்கிவிட்டனர். இவ்வாறே உயர் பாதுகாப்பு வலயம் என்று வரையறுக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து, மக்களின் வெளியேற்றம் படிப்படியாக நடந்துமுடிந்து, தற்போது அந்தப் பிரதேசங்கள் மக்களுக்குச் சொந்தமில்லாமல் போய் விடுமோ என்கின்ற இறுதிநிலைக்கு வந்திருக்கிறது. அம்மக்களிடையே இவ்வாறான அச்சவுணர்வையும், அது வெளிக்காட்டி நிற்கிறது.

ஆரம்பத்தில் இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் மனநிலை யுத்தம் முடிவடைந்து, தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் போய்ச் சேர்ந்து தமது - குடும்பம், உறவு, ஊர், நாடு, உலகம் என்கின்ற ஒரு ஆனந்த உணர்வினை அடைவோம் என்பதாக இருந்தது. யுத்தத்தின் தீவிரத்தை உணர்ந்து, அதனையே வாழ்க்கையாக்கிக் கொண்டவர்கள் என்று, இந்தப் பிரதேசத்து மக்களைக் குறிப்பிட்டாலும் பொருந்தும்.

யுத்தம் என்கிற நெருப்பு - இவர்களைக் கலைக்கச் செய்தபோதும், அதற்குள் வெந்து, கருகாமல் தமது உயிர்களைப் பாதுகாத்துக்கொண்டு, ஓடிஓடிக் களைத்துப் போனவர்கள் இந்தப் பகுதி மக்கள். இந்த மக்கள் போன திசைகள் எல்லாம், யுத்தம் இவர்களைத் தேடி வந்துகொண்டிருந்தது. இன்னொரு விடயம் கூறித்தானாக வேண்டும். தம்மைத் தமது பகுதியிலிருந்து வெளியேற்றி, தமது பகுதிகளை ஆக்கிரமித்து வைத்திருப்பவர்கள் போனதும், தமது பகுதிக்குத் தாம்தான் முதலில் செல்ல வேண்டும் என்ற நோக்கில், ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பிரதேசத்துக்கு அருகில் - தமது வசிப்பிடங்களை அமைத்து, களைத்துப் போனவர்கள்- இவர்களில் ஏராளம் பேர் உள்ளனர் என்பதுதான் அந்த விடயம்.

தங்களிடம் வைத்திருக்கும் திறப்புக் கோர்வைகளால்தான், தங்களுடைய வீடுகளைத் திறக்கலாம் என்று நம்பி, திறப்புக்கோர்வைகளை இன்னமும் பத்திரப்படுத்தி வைத்திருப்பவர் மனநிலைகளும், வேதனையளிக்கும் விடயமாகவே உள்ளன.

தான் பிறந்த மண்ணில், தனது உயிர் பிரியவேண்டும் என்று, தமது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நோயாளியாகிவிட்ட எத்தனையோ பேரும் இதில் அடங்குகிறார்கள். தன்னுடைய உழைப்பால் உருவாகிய வீடு, தன்னால் இருந்து அனுபவிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் கொண்டவர்களின் பெருமூச்சும், காற்றிலே கரைந்து போனதைத்தான் காண்கிறோம்.

சுமார் இரண்டு தசாப்தகாலமாக- உயர் பாதுகாப்பு வலயங்கள் என்று குறிக்கப்பட்ட இந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் மனவுணர்வுகளும், வாழ்வின் ஏக்கங்களும் இவ்வாறானதாகவே இருக்கிறது.

இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் ஏக்கங்களைப் போக்கி, அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு, வழி ஏற்படுத்திக் கொடுப்பவர் என யாரும் முன்வர வில்லையா? என்ற கேள்வி இந்தச் சந்தர்ப்பத்தில் எழுவது நியாயமானதே.

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலான செயற்பாடுகளும் நிகழ்ந்திருக்கின்றன. பல்வேறு தரப்பினிடம் கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. கோரிக்கைகள் எவற்றிற்கும் தீர்வு கிடைக்காமல் போனமைதான் எஞ்சியுள்ளன.

வலி.வடக்கில் இடம்பெயர்ந்தோர் சங்கம் போராட்டங்களை நடாத்தி வருகிறது. இவர்கள் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலிருந்து, யாழ். செயலகம் வரையும் ஊர்வலம் ஒன்றை நடத்தியிருந்தனர். உயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள மக்களை மீளக்குடியேற அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, இவர்கள் - இந்த ஊர்வலத்தை நடாத்தியிருந்தனர். ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. குறிப்பிட்ட ஒரு காலப்பகுதி வழங்கப்பட்டு - அந்தக் காலப் பகுதியில் தம்மை மீளக்குடியேற அனுமதிக்காது விட்டால், போராட்டம் விரிவுபடுத்தப்படும் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாறு - பல பகுதியிலும்



போராட்டங்கள் நடைபெற்றன. இந்தப் போராட்டம் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் போராட்டங்களைக் கருத்தில் எடுப்பவர்களைத்தான் காணமுடியவில்லை.

இந்த நிலையில் இந்தியாவிலிருந்து நம்பியார் வந்தார். அவர் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக கதைப்பதற்கு வந்ததாகக் கூறப்படுகிறது. அவரும் வந்து, உயர் பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிட்டார். மீண்டும் இந்தியா சென்றார். ஏதோ ஒன்று, இரண்டு அறிக்கைகளைவிட்டார். அத்துடன், அவரது பங்கு நிறைவேறிவிட்டதாக அடங்கிவிட்டார்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்



செய்திக் கட்டுரை

சினை தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு விளக்குவதற்காக நடாத்தப்படவிருந்த கூட்டத்துக்கு, கண்காணிப்புக்குழுவினர் செல்லமறுத்துவிட்டதாகவும் அறியமுடிகிறது.

இந்த நிலையில் - உயர் பாதுகாப்பு வலயத்தில், எதுவித சத்தம் சந்தடியின்றி, தொடர்ந்து அமைதி வலயமாகவே உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் இருக்கப் போகின்றன போலத்தான் உள்

**பூ.நகுலன்**

ளது. அந்தப் பிரதேசத்தில் தமிழர்களின் குழந்தைகள் ஓடிவிளையாடும் காலம் எப்போது வருமோ என்ற ஏக்கம், எல்லோர் மனங்களிலும் தவழ்கின்றன. ★

# யாழ்ப்பாணத்தில் விவசாய கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட - விவசாய பயிற்சி நிலையமும், விவசாய ஆராய்ச்சி பிரிவு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து நடாத்தும் விவசாயக் கண்காட்சி, எதிர்வரும் வியாழக்கிழமை முதல் மூன்றுதினங்கள் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியின் முதன்நாள் நிகழ்வில் - அரச அதிபர் செ.பத்மநாதனும், இரண்டாம் நாள் நிகழ்வில் - வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.அமிர்தலிங்கமும், மூன்றாம்நாள் நிகழ்வில்- விவசாய கால்நடை அபிவிருத்தி மற்றும் காணி, நீர்ப்பாசன, கடற்தொழில் சபையின் செயலாளர் ப.இராமநாதன் ஆகியோரும் பிரதம விருந்தினர்களாகவும்-

சிறப்புவிருந்தினராக - வடக்கு- கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கநாதன், பிரதி பிரதம செயலாளர் கே.மகாலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கண்காட்சி - '21 ஆம் நூற்றாண்டின் விஞ்ஞானமும், தொழில்நுட்பமும்' என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ளது. விவசாயத்துறை சார்ந்த பல்வேறு அம்சங்களுடன், பயிர்ச்செய்கைமுறைகள், ஆராய்ச்சித் தகவல்கள், விலங்கு வேளாண்மை ஆகியன ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியினை மாணவர்கள் பார்வையிட வசதியாக, 18 ஆம் திகதி - யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்களும், 19 ஆம் திகதி - வடமராட்சிக் கல்வி வலய மாணவர்களும், 20 ஆம் திகதி- தென்மராட்சி, தீவக மாணவர்களும் கலந்துகொள்ளலாமென, உதவி விவசாயப்பணிப்பாளர் ச.சின்னத்துரை தெரிவித்துள்ளார்.

## எழுத்துப் பரீட்சை!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள் பீட, ஈராண்டு பகுதி நேர கல்வித் தகைமைக் கற்கை நெறி அனுமதிக்கான எழுத்துப் பரீட்சை, எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமெனப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான அனுமதி அட்டைகள் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும், தனித்தனியாக விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(100)

# ஈழத்து நாடகத் தளத்தில் இராவணேசன் நாடகத்தின் பங்கு

யாழ்ப்பாணத்தில் 'இராவணேசன்' நாடகம்- 16 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேறவுள்ளது. ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றில் 'இராவணேசன்' முக்கியமானதொரு நாடகமாகும். 1960 ஆம் ஆண்டுகளில், ஈழத்தமிழரின் தேசிய நாடகமரபை மீள் கண்டுபிடிப்புச் செய்து, உலகுக்கு அறிவித்த பேராசிரியர் சு.வித்தியானந்தன், 1960 ஆம் ஆண்டுகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில், நான்கு கூத்துக்களைத் தயாரித்தார். அந்த நான்கினுள் ஒன்றுதான் 'இராவணேசன்.

மட்டக்களப்பு வடமோடிக்கூத்து முறையில் அமைந்த இந்த நாடகத்தில், அன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாயிருந்த- பேராசிரியர் சி.மௌனகுரு, பேராசிரியர் அ.சண்முகதாஸ், தினக்குரல் ஆசிரியர் சிவனேசச்செல்வன் ஆகியோரும், இன்னும் பலரும் பங்குகொண்டனர். இந்த நாடகப் பிரதியை உருவாக்கியதுடன், அதில் இராவணேசன் பாத்திரத்தையும் ஏற்று நடித்தார் பேராசிரியர் சி.மௌனகுரு.

1960 ஆம் ஆண்டுகளில் - மட்டக்களப்பின் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் செம்மை செய்து அளிக்கப்பட்டன. இம்மரபை அன்று பாடசாலைகளும், மன்றங்களும் பின்பற்றின. முதன்முதலாகப் பெண்களே- பெண் பாத்திரம் தாங்கி நடித்தனர். இலங்கை எங்கணும் 'இராவணேசன்' மேடையேற்றப்பட்டுப் பலத்த வரவேற்பைப் பெற்றது.

ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்குப் பின்பு, பேராசிரியர் சி.மௌனகுரு கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைக்காக இதனைத் தயாரித்து அளிக்கிறார். இந்த நாடகத்தற்கான பிரதியை மீண்டும் புத்தாக்கம் செய்ததுடன், நடிகர்களுககான ஆட்டப் பயிற்சியளித்து, நெறியாள்கையும் செய்துள்ளார்.

ஈழத்துத் தமிழரின் தேசிய நாடக வடிவமான கூத்தை, புதிய சவால்களுக்கு ஏற்றவகையில் வளர்த்தெடுக்கும் பணியிலும் - அதனை உலக நாடகத் தரத்தில் வைக்கும் வகையிலும், தீவிர பணியாற்றிவரும் நுண்கலைத்துறை மாணவர்களும், அரச அதிகாரிகளும் இதில் நடிக்கின்றனர். கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர்களான- கி.ஜெயசங்கர் இராவணனாகவும், பாலசுகுமார் பாடகராகவும், உதவி



பேராசிரியர் மௌனகுரு

அரசாங்க அதிபரான தவராசா இந்திரஜித்தாகவும், மக்கள் வங்கி முகாமையாளர் அங்கதனாகவும் பாத்திரமேற்றுள்ளனர்.

நாற்பது வருட அரங்க அனுபவங்களையும், அரங்க வளர்ச்சியையும் உள்வாங்கி, பேராசிரியர் மௌனகுருவால் தயாரிக்கப்பட்ட இந்த நாடகம்- கூத்தினூடாக வெளிக்கிளம்பும் புதிய நாடகமாக அமைகின்றது. இராவணேசனை - மானமும், வீரமும், பாசமும்மிக்க துன்பியல் நாயகனாக

**கலாநிதி எஸ்.சிவலிங்கராசா.**

வைத்து அமைக்கப்பட்ட இந்த நாடகத்தில், ஈழத்துக் கூத்து மரபும், கிரேக்க துன்பியல் மரபும் இணைவதைக் காணலாம்.

### ரஷ்ய பாதுகாப்புத் தலைமையகத்தின் மீது

# செச்சினியாவில் தற்கொலைத் தாக்குதல்; மூவர் உயிரிழப்பு, பதினேழு பேர் படுகாயம்!



(செச்சினியா)

செச்சினியாவில் அமைந்துள்ள ரஷ்யாவின் பாதுகாப்புத் தலைமையகத்தின் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டதுடன், 17 பேர் படுகாயமடைந்தனர். தாக்குதலுக்கு உள்ளான கட்டடம் பலத்த சேதத்திற்குள்ளானது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஏனைய இருவரும் வைத்தியசாலையில் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எவரும் உரிமைகோராத போதும், செச்சினியத் தீவிரவாதிகளே இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என ரஷ்ய அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

செச்சினியாவில் அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதன்மூலம் செச்சினியாவில் அரசியல் தீர்வு ஒன்றை காணமுடியும் என்று ரஷ்யா கருதிவருகிறது.

எனினும், நீண்டகாலமாகத் தனிநாடு கோரி ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் செச்சினியப் போராளிகள் செச்சினியாவில் ரஷ்யா நடத்தத் தீர்மானித்திருக்கும் தேர்தலை நடத்த விடாமல் தடுப்பதற்கு - தங்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தப்போவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதமும் செச்சினியப் போராளிகள் இராணுவ வைத்தியசாலை மீது மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் 50 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

## பிரிட்டனில் பாடசாலை அருகில் குண்டுகள் கண்டுபிடிப்பு

(லண்டன்)

பிரிட்டனிலுள்ள பிரபலமான இரு பாடசாலைகளுக்கு முன்பாகவைக்கப்பட்டிருந்த பைப் குண்டுகள் பொலிஸாரால் செயலிழக்கச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அருகிலிருந்த தேவாலயத்தின் பிரார்த்தனைகள் நிறுத்தப்பட்டு அப்பகுதி முழுவதும் உஷார் நிலையில் வைக்கப்பட்டது.

## ஆப்கான் மோதல் சம்பவமொன்றில் 15 தலிபான் போராளிகள் உயிரிழப்பு!

ஆப்கானின் தென்பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில், தலிபான் போராளிகளின் முக்கிய தலைவர் ஒருவர் உட்பட 15 போராளிகள் கொல்லப்பட்டதாக, ஆப்கானிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தலிபான் படைகளின் முக்கிய தலைவரான முல்லா அப்துல் ரஹீம் என்பவரே கொல்லப்பட்டவரென அறிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட தலிபான் போராளிகள் சாபுல் நகரத்திலிருந்து வந்தவர்களெனக் கூறப்படுகிறது.

2001 ஆம் ஆண்டு ஆப்கானில் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட தலிபான்கள் - அண்மைக்காலமாக மீள ஒன்றிணைந்து பல புதிய தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கர்களை ஆக்கிரமிப்பாளராகவே மக்கள் கருதுகின்றனர்!

### தொடரும் துன்புறுத்தல்களே காரணம் என்கின்றனர் அதிகாரிகள்

ஈராக்கிய மக்களை அமெரிக்க இராணுவத்தினர் தொடர்ந்தும் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கி வருவதால், அவர்களை ஒரு ஆக்கிரமிப்பு படையாகவே ஈராக்கிய மக்கள் கருதுவதாக, ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கப்படை அதிகாரிகள் ஈராக்கிய மக்களை நடத்தும் விதம் ஈராக்கியரிடையே அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளதாக, ஈராக்கிய அதிகாரியான கபி கூசே - ஸ்பானிய வெளிவிவகார அமைச்சர் அனா பலசியோவிடம் தெரிவித்தார். அத்துடன் தற்போது ஈராக்கில் நிலைகொண்டுள்ள ஸ்பானியப் படையினர் ஈராக்கியர்களுடன் நண்பர்களாகப் பழகும் அதேவேளை, அமெரிக்கப்படையினர் ஆக்கிரமிப்பு படைகள் போல் செயற்படுவதாகவும் ஸ்பானிய வெளிவிவகார அமைச்சரிடம் கபி கூசே தெரிவித்தார்.

## உலக நோக்கு

## கொலம்பியாவின் மலைப்பிரதேசமொன்றில் 8 உல்லாசப் பிரயாணிகள் கடத்தப்பட்டனர்!



(போகோட்டா)

கொலம்பியாவின் மலைப் பிரதேசமான சேய்ரா நிவேடா என்ற இடத்தில் 8 உல்லாசப் பிரயாணிகள்- 'கொலம்பிய புரட்சிகர படை' என்ற அமைப்பினால் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்டவர்களில் 4 இஸ்ரேலியர்கள், 2 பிரித்தானியர்கள், ஜேர்மன், ஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒவ்வொருவரும் அடங்குவதாகக் கூறப்படுகிறது.

அவர்களை மீட்பதற்காக ஆயிரக்கணக்கான படையினர் அந்த மலைப்பிரதேசத்தில் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளார்கள் என்று, கொலம்பிய ஜனாதிபதி அல்வரோ யுறைப் தெரிவித்தார்.

மேற்படி மலைப்பிரதேசம் - மாக்சிஸக் கெரில்லாக்கள் மற்றும் போதைப்பொருள் கடத்துபவர்கள் போன்றவர்களின் மறைவிடமாக உள்ளது. இப்பகுதிக்குள் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வருவதை இவர்கள் விரும்புவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 39 ஆண்டுகளாக கொலம்பிய புரட்சிகரப் படை அரசுக்கு எதிராகப் போராடிவருகிறது. இவர்கள் தங்கள் போராட்டத்திற்குத் தேவையான பணத்தினை பெறுவதற்காகவே - ஆட்களைப் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர்களால் கடத்தப்பட்டவர்களில் விடுதலை செய்யப்பட்டவர்களை விட, கொலை செய்யப்பட்டவர்களே அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களின் பிடியில் 5 ஆண்டுகளுக்கு மேல் விடுவிக்கப்படாமல் பல அரசியற் கைதிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவர்களுள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட ஒருவரும் அடங்குகிறார்.

செய்ரா நிவேடா என்ற மேற்படி பிரதேசத்தில் - கிறிஸ்துவுக்கு 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகத்தின் தொல்பொருள் சின்னங்களைப் பார்வையிடுவதற்காகவே உல்லாசப் பிரயாணிகள் இப்பிரதேசத்திற்கு அதிகளவில் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பக்தாத்தில் கிரேனட் தாக்குதல்; அமெரிக்கப் படைச் சிப்பாய் பலி!

ஈராக் தலைநகர் பக்தாத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படைவீரர் ஒருவர் - கிரனேற் தாக்குதலில் கொல்லப்பட்டார். படுகாயமடைந்த மேற்படி அமெரிக்கப் படைவீரர் வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். எனினும், அவர் அங்கு மரணமானார்.

கடந்த மே மாதம் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா ஆரம்பித்த போரில் இதுவரை 73 அமெரிக்கப் படைவீரர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஈராக்கிய கெரிலாக்கள் - தலைநகர் பக்தாக்கிலும், சுனி முஸ்லிம் வாழும் பகுதிகளிலும் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்களை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.




வதந்திக்கு இருக்கும் வேகம் தந்திக்கும் கிடையாது.

கிழக்கிலங்கையில் சமீபத்தில் ஏற்பட்ட குமுறல்கள், முறுகல்களுக்கு இந்த வதந்திகளே காரணம்.

இலங்கையில் 1958 ஆம் ஆண்டில் முதல் தடவையாக ஏற்பட்ட இனக்கலவரத்துக்கும், இக்கலவரம் விரிந்து பரவுவதற்கும் வதந்திகளே காரணமாக இருந்தது.

அப்போது, குழந்தையை வெட்டி மீன்தொட்டிக்குள் போட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து தமிழர்கள் கொழும்புக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று தென்னிலங்கையில் வதந்தி கிளம்பியது.

இப்படி பலவிதமான வதந்திகள். சாதாரணமாக ஒருவன் கற்பனை செய்து பார்க்கமுடியாதவையெல்லாம் கண்ணால் கண்டமாதிரி கதைப்பார்கள்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவம். நானும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறேன்.

1952 ஆம் ஆண்டு நான் மட்டக்களப்புக்கு எனது அண்ணரிடம் சென்று தங்கியிருந்தபோது, யாழ். வைத்தீஸ்வராலிருந்து விலகி மட்டக்களப்பு சிவானந்தாவில சேர்ந்து சில மாதங்கள்கூட ஆகவில்லை. 1952 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் வந்தது.

இந்தத் தேர்தலில், மட்டக்களப்பு தொகுதியில் ஆர்.பி.கதிர்காமரும், சின்னலெப்பையும் நேரடியாக மோதிக் கொண்டார்கள். இவர்கள் எந்தக் கட்சிகளில் போட்டியிட்டார்கள் என்பது நினைவில் இல்லை. கதிர்காமர் சுயேட்சையாகப் போட்டியிட்டதாக நினைவு.

இருபக்கத்து ஆதரவாளர்களும் தங்கள் வேட்பாளர்களின் வெற்றிக்காக வாக்காளர்களை ஏற்றியிறக்குவதிலும், புள்ளடி போட்டுப் பழக்குவதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு முன்பாக வேட்பாளர்களின் பந்தல்கள், ஆரவாரங்கள்.

மட்டக்களப்பு நகரிலுள்ள வாக்களிப்பு நிலையங்களில் நடைபெறும் நிகழ்வுகளை வேடிக்கை பார்ப்பதற்கு எனக்கு ஆசை. யாழ்ப்பாணத்தில் 47 ஆம் ஆண்டு தேர்தலில் வேடிக்கை பார்த்து 'ஜே' போட்ட அனுபவமுண்டு.

மட்டக்களப்பிலும் இப்படிப் பார்க்கவேண்டுமென்ற ஆசையேற்பட்டது. மட்டக்களப்பில் நான் போய்ச் சேர்ந்தபோது, அயலில் எனது வயதளவிலிருந்த இருவரை அண்ணர் எனக்கு அறிமுகம்செய்து வைத்திருந்தார். நாங்கள் நண்பர்களானோம். ஒருவர் பெயர் சந்திரசேகரம். மற்றவர் கிருஷ்ணசாமி (இவர் எனக்கு உறவும்கூட) தேர்தல் தினத்தன்று கிருஷ்ணசாமியைக் காணவில்லை.

வாக்களிப்பு நிலையங்கள் பக்கம் போய் வேடிக்கை பார்ப்பதற்கு சந்திரசேகரமும் சம்மதித்தார். நாங்கள் இருவரும் எங்கள் சைக்கிள்களில் காத்தான்குடிக்கும், அங்கிருந்து ஆரம்பற்றைக்கும், அதையும் தாண்டி இடையிடையே தங்கிநின்று வேடிக்கை பார்த்துச் சென்றோம்.

நேரமாகிவிட்டது என்று நாங்கள் திரும்பியபோது, ஒவ்வொரு இடத்திலும் மக்கள் சிறுசிறு கூட்டமாக நின்று பேசிக்கொண்டும் கவலைப்பட்டுக்கொண்டும் நின்றார்கள்.

காத்தான்குடியில் முஸ்லிம் மககள் தமிழர்களைத் தாக்குகிறார்களென்றும், சிலரை வெட்டிப் போட்டார்களென்றும் பேசிக்கொண்டார்கள்.

நாங்கள் திரும்பி வந்தபோது ஆரம்பற்றையில் சில பெண்கள் வழிமறித்து எங்களை விசாரித்தனர். மட்டக்களப்புக்குப் போகவேண்டாம். நீங்கள் இளம்பிள்ளைகள் உங்களை ஏதும் செய்துபோடுவார்கள் என்று தடுத்தனர்.

சில முதியவர்கள் எங்களைப் படகில் கொண்டுபோய் சேர்ப்பதாகச் சொன்னார்கள்.

"இளம்கன்று பயமறியாது" என்று அவர்களே சொன்னமாதிரி நாங்கள் அவர்கள் சொன்னதைக் கேட்காமல் சைக்கிள்களிலேயே நகருக்கு திரும்பினோம். காத்தான்குடியில் எதுவும் நடக்கவில்லை. வேறு இடங்களிலும் ஒன்றும் நிகழவில்லை. ஆனால் "வதந்தீ" பரவியிருந்தது. நாங்கள் கல்லடி பாலத்துக்கு அருகேயுள்ள வேதக்கோயில் வீதியில் திரும்பியதும் எங்களைத் தேடி என் அண்ணரும் நண்பர்களும் காத்திருந்தனர். நாங்கள் வந்திறங்கியதும், பதற்றத்திலும் பீதியிலும் இருந்தவர்களிடம் எங்களுக்கு எதுவும் நடக்கவில்லை, எங்கேயும் எதுவும் நடக்கவில்லை என்று சொல்லி விளக்கினோம்.

வதந்திக்கு அச்சமயத்தில் நாங்கள் முற்றுப்புள்ளி வைத்தோம். மாலையில் அதுவே பல வடிவத்தில் வேறு எங்கெல்லாமோ பரவியது.

ஆனாலும் இரண்டு மூன்று தினங்களில் இந்தக் கலகம் அடங்கிவிட்டது. சிலருக்கு சொத்துக்கள் சில சேதமடைந்தன. உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. 1956 இல் இருந்து இன்றுவரை, வதந்தி - உயிர்ப்பலிகள் தான் கேட்கிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சம்பள முரண்பாட்டை நீக்குமாறு சுகாதார ஊழியர்கள் போராட்டம்

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் பணிபுரியும் சுகாதார ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரி - நாளை வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வடக்கு - கிழக்கிலுள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் சுகாதார ஊழியர்கள் உட்பட, நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலை ஊழியர்களும் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் இணைந்துகொள்வர் என, அரச சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பு இணைப்பாளரான சமந்த கோரளை ஆராய்ச்சி தெரிவித்தார்.

நோயாளர்களின் நலன்கருதி சில சிறுவர், பெண்கள் வைத்தியசாலை, மகரகம புற்றுநோய் வைத்தியசாலை போன்ற நான்கு வைத்தியசாலைகள் இயங்குமெனவும், அனைத்து வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைகள் வழமைபோல் நடைபெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாற்சந்தி

பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தை, பலஸ்தீனத்திலிருந்து வெளியேற்ற இஸ்ரேல் முடிவெடுத்துள்ளது. இந்த முடிவு இஸ்ரேலின் முட்டாள்தனத்தை வெளிப்படுத்துகின்றது என, ஐ.நா செயலர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

ஐ.நா சபையில் அங்கம் வகிக்கும் அரபு நாடுகள் அரபாத்தை வெளியேற்றும் இஸ்ரேலின் முடிவு குறித்து ஐ.நாவில் வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென் றுள்ளன. இது அடுத்த கோமாளித்தனம்.

ஒருவரை - அதுவும் அந்த நாட்டு மக்களின் விருப்புக்குரிய தலைவரை இன்னொரு அந்நியநாடு, அவரது சொந்த நாட்டை விட்டு வெளியேறு என்று கூறுவதோ அல்லது வெளியேற்ற முடிவு செய்வதோ மோசமான அடாவடித்தனமாகும். இது இஸ்ரேலின் அரசியல் பயங்கரவாத நகர்வு என்றே கூறவேண்டும்.

இங்கேதான் ஒரு செய்தி இஸ்ரேலுக்கு ஏளனமாக விடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது "எமது சடலங்களைத் தாண்டியே அரபாத்தை நாடு கடத்த முடியும்" என இரண்டாயிரம் பலஸ்தீனச் சிறுவர்கள் தெரிவித்துள்ளார்கள் என்பதே அச்செய்தி-

"முன்னர் சப்ரா - சாயல்லா அகதி முகாம்கள் மீது ஈவிரக்கமற்ற முறையில் குண்டுத்தாக்குதல் நடத்தி குழந்தைகள் உட்பட ஏராளமானனோரை அழித்த 'ஷரோன்' - அதுதான் இஸ்ரேலிய பிரதமர் - அதற் கெல்லாம் அஞ்சுவாரா" - என்கிறார் ஒரு வரலாற்றாசிரியர்.

-தெருவாசி

## கண்டியில் பிக்குகள் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு எதிராக பிக்குகள் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை கண்டியில் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த சத்தியாக்கிரகத்துக்கான ஏற்பாடுகளை கண்டி இணைந்த பௌத்த இயக்கம் செய்திருந்தது.

இந்தச் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பிக்குகள் தலதா மாளிகையில் வழிபாட்டில் பங்குபற்றியிருந்தனர்.



கண்டியில் அரச எதிர்ப்பு சத்தியாக்கிரகத்தில் பிக்குகள்.



திருகோணமலை அரசியற்துறை அலுவலகத்தில் நேற்று ஆரம்பமான தியாகி தீலிபனின் நினைவுதின ஆரம்பநாளில் மக்களும், போராளிகளும் மலரஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## மன்னாருக்கு நெதர்லாந்து தூதரக அதிகாரிகள் விஜயம்

(மன்னார்)

நெதர்லாந்து தூதரக அதிகாரிகள் குழு - இன்று மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

அங்கு அவர்கள் மன்னார் மாவட்ட அரச செயலக மேலதிகப் பதிவாளர் அலுவலகத்தில் கலந்ரையாடலொன்றை நடத்தவுள்ளனர்.

இதில், காணாமற்போனவர்கள் பற்றிய விபரங்கள், காலங்கடந்த பிறப்பு, இறப்பு சம்பந்தமான தகவல்களை அவர்கள் கேட்டறிந்து கொள்வர். இந்தக் கலந்துரையாடலில் பங்குகொள்ள மன்னார் மாவட்டத்தின் சகல கிராம அலுவலர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

'சட்டோய்' என்ற அமைப்பு நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன், மன்னாரிலிருந்து இந்தியா சென்ற மக்களுக்கு - பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் சம்பந்தமான பதிவுகளை இந்தியா சென்று மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 17 மாவட்டங்களில் பிக்குமார் சத்தியாக்கிரகம்

தேசிய பிக்குகள் முன்னணியின் சத்தியாக்கிரக நடவடிக்கை - எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு 17 மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராகவே இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்படுவதாக, தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் கலவெல்கல சாந்தலோக தேரர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி சந்திரிகாவுடன் மங்கள சமரவீர முறுகல்!

ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே கூட்டணி அமைப்பது குறித்து - அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் முறுகல்நிலை ஏற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறை மாவட்டத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களை- மங்கள சமரவீர ஜே.வி.பி ஆதரவாளர்களாக மாற்றிவிட்டதாக, மங்கள சமரவீர மீது ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜே.வி.பியுடனான கூட்டணி அமைப்பதிலுள்ள நெருக்கடிநிலை குறித்து மங்கள சமரவீரவுக்கும், அனுரா பண்டாரநாயக்கவுக்கும் விளங்கவில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற இருவருக்கு ஐயாயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மின்சாரம் பெற முயன்ற இருவருக்கு தலா ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

புத்தூர் சிறுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த மேற்படி இரு நபர்களும்- சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அச்சுவேலி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட இவர்கள் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதன்போதே யாழ்.நீதிமன்ற நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். அதேவேளை சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாக கூறி கைதுசெய்யப்பட்ட சிலரை, சுற்றவாளிகள் எனத் தெரிந்ததையடுத்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

## சிறைச்சாலை ஊழியர்களை அதிகரிப்பதற்குத் தீர்மானம்!

(கொழும்பு)

சிறைச்சாலையில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கையை இருநூறு பேரால் அதிகரிப்பதற்கு- சிறைச்சாலைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தற்போது 200 பேரை சேவையில் அமர்த்துவதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியிருப்பதாக, சிறைச்சாலைப் பணிப்பாளர் நாயகம் மர்சூக் தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் தற்போது 300 உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் கூறினார்.

இந்த வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்களை துரிதமாக நியமிப்பதற்கு - அமைச்சரவையில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் அவர் கூறினார்.

## திருமலையில்...

இந்த முகாம் விவகாரம் குறித்து பாதுகாப்புப் படையினர் அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவந்த போதிலும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என ஜனாதிபதி தனது விசனத்தைத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து அனுப்பப்பட்ட கடிதத்தில் அந்த பிரதேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டியதன் அவ்சியம் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்கள் போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டதாக, ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (01)

### தமிழ்ப் பிரதேசங்களில்

## வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முஸ்லிம்களுக்கு புலிகள் அழைப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பிரதேசங்களில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்ற முஸ்லிம் வர்த்தகர்களுக்கு - எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் அவர்கள் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் சந்திப்பு ஒன்று நேற்று மாலை 5 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கரடியனாறு தேனகம் விடுதியில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் - எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் முஸ்லிம் வர்த்தகர்கள் மீண்டும் தமது வர்த்தக நடவடிக்கைகளை தமிழ்ப் பிரதேசங்களில் ஆரம்பிக்கமுடியும் எனத் தெரிவித்தார்.

## விடுதலைப்...

கப் புரிந்துகொள்ளமுடிந்தது.

வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட பணத்தை இடைக்கால நிர்வாகத்தின் ஊடாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் ஒப்படைக்க வேண்டுமென விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அதற்கு மாற்றுத்திட்டமொன்றை அரசாங்கம் பிரேரிக்க உள்ளதாகவும் யசூசி அகாஷி மேலும் தெரிவித்தார்.

## புலிகள்-படையதிகாரிகள் நேற்றுச் சந்தித்துப் பேச்சு

### கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், படை அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் - கோவில் வீதியில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்திலேயே இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இரண்டு பகுதியினருக்கும் இடையே மாதாந்தம் நடைபெறும் கலந்துரையாடலே நேற்று நடைபெற்றதாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட பிரதிநிதி தெரிவித்தார். (202)

## ஜே.வி.பி தலைமையில் புதிய தேசிய முன்னணி!

### விமல் வீரவன்ச தெரிவிப்பு

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் - புதிய தேசிய முன்னணி ஒன்றை அமைப்பதற்கு இந்த வாரத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக மக்கள் விடுதலை முன்னணி பல்வேறு அரசியல் கட்சிகளுடனும், பல அமைப்புக்களுடனும், மதப் பெரியார்களுடனும் கலந்துபேசி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்களிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைத்திருப்பதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

## சந்திரிகா...

அத்துடன், ரோக்கியோவில் நடந்த இலங்கைக்கு உதவி வழங்குவதற்கான மாநாட்டின் முடிவுகள் பற்றியும் - அகாஷி, ஜனாதிபதிக்கு விளக்கியதாகத் தெரியவருகிறது.

## தமிழ்ச்...

படுகிறது.

கண்காணிப்புக்குழு சார்பாக ரெலவ்சன் உட்பட நான்கு பேர் கலந்துகொள்ளவிருப்பதாகவும், இந்தக் குழுவினர் இன்று கிளிநொச்சியில் தங்கி நாளை கொழும்பு திரும்புவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 94.64 | 95.27 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.68 | 153.33 |
| 1 யூரோ | 106.39 | 107.01 |
| 1 சுவிஸ் பிராங் | 68.25 | 69.50 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 61.25 | 62.00 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.61 | 25.61 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.